வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959 Reg. No.: P. 1632

# ஈழநாடு

Eelanadu ඊළනාඩු

விலை ரூ. 30/=




Email : eelanaduweekly@gmail.com மலர் : 07 12.05.2026 செவ்வாய்க்கிழமை இதழ் : 126 பக்கங்கள் : 08

# இன விடுதலை போராட்டத்துக்கு முழுமையான ஆதரவு தாருங்கள்!

## விஜயிடம் தமிழரசுக் கட்சி கோரிக்கை

யாழ்ப்பாணம், மே. 12

**எங்களது இன விடுதலைக்கான போராட்டத்திற்கு ஆதரவு அளித்து எமது இனம் தங்கள் காலத்தில் விடுதலை பெற்றிட சகல ஆதரவையும், ஒத்துழைப்பையும் வேண்டி நிற்கின்றோம் என இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி, தமிழக முதலமைச்சர் விஜய்யிடம் கோரிக்கை விடுத்துள்ளது.**

தமிழக முதலமைச்சராக விஜய் பதவியேற்றதைதத் தொடர்ந்து அவரை வாழ்த்தியும் கோரிக்கை விடுத்தும் இலங்கை தமிழ் அரசுக் கட்சி கடிதம் அனுப்பியுள்ளது. அந்தக் கடிதத்தில் உள்ளதாவது-

இலங்கை வாழ் தமிழ் மக்களின் பிரதான அரசியல் கட்சியாகிய நாம் தமிழ் நாட்டின் 07

## ஸ்டாலினை சந்தித்தார் விஜய்



சென்னை, மே. 12

தமிழக முதல்வர் விஜய், முன்னாள் முதல்வரும் தி.மு.க. தலைவருமான ஸ்டாலினை சந்தித்தார்.

ஆழ்வார்பேட்டையில் உள்ள ஸ்டாலின் வீட்டுக்கு சென்ற விஜயை, உதயநிதி ஸ்டாலின் வரவேற்று ஆரத்த ழுவினார்.

தி.மு.க. - அ.தி.மு.க. என சுமார் அறுபது ஆண்டுகளாக மாறி மாறி நீடித்த தமிழ்நாட்டு அரசியல் ஆதிக்கத்தை உடைத்து ஆட்சிக்கு வந்துள்ளார் விஜய்.

விஜய் நேற்று முன் தினம் முதல்வராக 07

## கண் தானத்தில் சர்வதேச ரீதியில் முன்னிலை வகிக்கிறது இலங்கை

கொழும்பு, மே. 12

இலங்கையிலுள்ளவர்களில் சுமார் 84 வீதமானோர் தமது கண்களைத் தானம் செய்வதற்கு விருப்பம் தெரிவித்துள்ளதாகச் சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

தேசிய கண் வங்கியின் தரவுகளை அடிப்படையாகக் கொண்டு வெளியிடப்பட்டுள்ள அறிக்கையிலேயே இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

கடந்த 15 ஆண்டுகளில் தேசிய கண் வங்கிக்கு சுமார் 17,000 விழிவெண்படலங்கள் தானமாகப் பெறப்பட்டுள்ளன.

பெறப்பட்ட விழிவெண்ப டலங்களைக் கொண்டு சுமார் 12,000 விழிவெண்படல மாற்று அறுவைச் சிகிச்சைகள் 07

## தமிழக அரசியலில் புதிய நாகரிகம் விஜய்யை பாராட்டும் தலைவர்கள்!

சென்னை, மே. 12

தமிழக முதலமைச்சராகப் பதவியேற்றுள்ள சி. ஜோசப் விஜய், மூத்த அரசியல் தலைவர்களை நேரில் சந்தித்து வாழ்த்துப் பெற்று வருவது ஆரோக்கியமான அரசியல் மாற்றமாகப் பார்க்கப்படுகிறது. முதலமைச்சரின் இந்த அணுகுமுறைக்கு இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மற்றும் தமிழ்நாடு காங்கிரஸ் குழு தலைவர் செல்வப்பெருந்தகை ஆகியோர் வரவேற்பு தெரிவித்துள்ளனர்.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயலாளர் மு.வீரபாண்டியன் வெளியிட்டுள்ள அறிக்கையில், ஆளுங்கட்சி மற்றும் எதிர்க்கட்சித் தலைவர்கள் ஒருவரையொருவர் சந்தித்துப் பேச முடியாத 03

## கபில சந்திரசேனவின் மரணம் தற்கொலைக்கான தூண்டுதல்!

### பொதுஜன பெரமுன குற்றச்சாட்டு

கொழும்பு, மே. 12

சிறீலங்கா எயார்லைன்ஸ் நிறுவனத்தின் முன்னாள் நிறைவேற்று அதிகாரி கபில சந்திரசேனவின் மர்ம மரணம் என்பது வெறும் தற்கொலை அல்ல, அது ஒரு தற்கொலைக்கான தூண்டுதல் என்பது தற்போது மிகத் தெளிவாகத் தெரியவந்துள்ளதாக பொதுஜன பெரமுனவின் பொதுச் செயலாளர், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி சாகர காரியவசம் தெரிவித்தார்.

பத்தரமுல்லை நெலும் மாவத்தையிலுள்ள பொதுஜன பெரமுனவின் கட்சித் தலைமையகத்தில் 07

## யாழ்.பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் முகாமையாளர் அதிகார துஷ்பிரயோகம்!

### நீதி கோரி பாதிக்கப்பட்ட ஊழியர்கள் போராட்டம்

யாழ்ப்பாணம், மே. 12

யாழ்பாணம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்க ஊழியர்கள் தமக்கு முகாமையாளரால் ஏற்படுத்தப்பட்டுவரும் பிரச்னைகள் மற்றும் அதிகார துஷ்பிரயோகங்களுக்கு தீர்வு கோரிப் போராட்டம் ஒன்றை முன்னெடுத்தனர்.

நிறைவேற்றுச் சபை மற்றும் பொது முகாமையாளர் ஆகியோரது செயற்றிறனற்ற செயற்பாடுகளால் யாழ். பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் பெரும் நிதி வீணடிக்கப்படுவதுடன் ஊழியர்க



ளின் நலன்களும் திட்டமிட்டு இல்லாது செய்யப்பட்டு வருவதாகக் கூறி குறித்த சங்கத்தின் ஆளுகைக்குள் இயங்கும் 15 கிளைகள் மற்றும் தலைமையக 07

## நாடு முழுக்க ரூ. 23,000 மில்லியன் மதிப்புள்ள அபிவிருத்தித் திட்டங்களுக்கு அரசு அனுமதி!

கொழும்பு, மே. 12

"சமூக சக்தி" வறுமை ஒழிப்பு தேசிய திட்டத்திற்காக 2026 வரவுசெலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்ட 25,000 மில்லியன் ரூபாய் நிதியில், இதுவரை 23,000 மில்லியன் ரூபாய் பெறுமதியான அபிவிருத்தித் திட்டங்களுக்கு அனுமதி வழங்கப்பட்டு, அவற்றை நடைமுறைப்படுத்துவதற்காக மாவட்ட செயலாளர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

வாழ்வாதார அபிவிருத்தி, உற்பத்திப் பொருளாதாரம் மற்றும் உணவுப் பாதுகாப்பு ஆகியவற்றுடன் தொடர்புடைய, சமூக அபிவிருத்தி சபைகளினால் முன்னுரிமைப்படுத்தப்பட்ட திட்டங்களுக்காகவே இந்த நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

"சமூக சக்தி" தேசிய திட்டத்தின் இதுவரைக்கால முன்னேற்றத்தை மீளாய்வு செய்வதற்காக, ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவின் தலைமையில் நேற்று ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்ற கலந்துரையாடலின் போதே இந்த தகவல்கள் வெளியிடப்பட்டன.

கிராமப்புற வறுமையை ஒழிப்பது மற்றும் கிராமிய சமூகத்தை மேம்படுத்துவதை 03

## விசாரணைகளுக்கு எந்த நேரம் அழைத்தாலும் வர நான் தயார்!

### கூறுகிறார் நாமல் ராஜபக்ஷ

கொழும்பு, மே. 12

விசாரணைகளுக்கு ஒத்துழைப்பு வழங்குவதே தமது நிரபராதித்தன்மையை நிரூபிப்பதற்கான சிறந்த வழிமுறை என்றும், அதனால் விசாரணைக்கு அழைக்கும் எந்த நேரத்திலும் சமூகமளிக்கத் தாம் தயாராக இருப்பதாகவும் பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

நேற்று நெலும் மாவத்தையிலுள்ள பொதுஜன 07

## தையிட்டி வீதியை மீட்கும் முயற்சி; 21ஆம் திகதி நீதிமன்றக் கட்டளை

யாழ்ப்பாணம், மே. 12

தையிட்டியில் சட்டவிரோத விகாரை அமைந்துள்ள காணிக்குள் கையகப்படுத்தப்பட்டுள்ள பிரதேச சபைக்கு சொந்தமான வீதியினை மீட்கும் நடவடிக்கையை பிரதேச சபை கைவிட வேண்டும் என பலாலி பொலிஸார் மல்லாகம் நீதவான் நீதிமன்றில் தாக்கல் செய்த வழக்குக்கான கட்டளை எதிர்வரும் 21ஆம் திகதி வழங்கப்படும் என நீதிமன்று திகதியிட்டுள்ளது.

குறித்த விகாரை அமைந்துள்ள பகுதிக்குள் வலி. வடக்கு பிரதேச சபைக்கு சொந்தமான "பவானி" வீதி காணப்படுகிறது. குறித்த வீதியினை 07

## பௌத்த பீடாதிபதிகளுக்கு பயந்து சட்டமீறல்களில் ஈடுபடும் பொலிஸ்!

### சுமந்திரன் எம்.பி. குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், மே. 11

பொலிஸார் பௌத்தர்களாக இருப்பதனால், பௌத்த பீடாதிபதிகளுக்கு பயந்து சட்டத்தை நடைமுறைப்படுத்த முயல்பவர்களை தடுத்து சட்ட மீறல்களை செய்ய முனைகின்றார்கள் என ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ சுமந்திரன் குற்றம்சாட்டியுள்ளார்.

தையிட்டி சட்டவிரோத விகாரை அமைந்துள்ள பகுதிக்குள் உள்ள வலி. வடக்கு பிரதேச சபைக்கு சொந்தமான "பவானி"வீதியை மீட்கும் 07

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியா வழங்கிய 450 மில்லியன் டொலர் நிதி உதவிப் பொதி துரிதப்படுத்தப்படும்!

## தூதுவர்-பிரதி நிதி அமைச்சர் சந்திப்பில் இணக்கம்

கொழும்பு, மே. 12

கடந்த ஆண்டு இலங்கையைத் தாக்கிய டித்வா சூறாவளியினால் ஏற்பட்ட பாதிப்புகளைச் சீரமைக்க இந்தியா வழங்கிய 450 மில்லியன் அமெரிக்க டொலர் நிதியுதவிப் பொதியை துரிதமாக நடைமுறைப்படுத்த இரு நாடுகளும் இணக்கம் தெரிவித்துள்ளன.

இலங்கைக்கான இந்திய தூதுவர் சந்தோஷ் ஜா மற்றும் தொழில் அமைச்சரும், நிதி மற்றும் திட்டமிடல் பிரதி அமைச்சருமான அனில் ஜயந்த பெர்னாண்டோ ஆகியோருக்கிடையில் நடைபெற்ற சந்திப்பின்போதே இது குறித்து கலந்துரையாடப்பட்டது.

இது தொடர்பாக இந்திய தூதுவர் தனது எக்ஸ் தளத்தில் இட்டுள்ள பதிவில், "450 மில்லியன் டொலர் பெறுமதியான டித்வா சூறாவளிக்குப் பின்னரான மறுசீரமைப்புப் பொதியை அமுல்படுத்துவதை துரிதப்படுத்த இணக்கம் காணப்பட்டது" எனத் தெரிவித்துள்ளார்.

கடந்த ஆண்டு நவம்பர் 27ஆம் திகதி இலங்கையைத் தாக்கிய டித்வா சூறாவளி காரணமாக 3 மில்லியனுக்கும் அதிகமான மக்கள் பாதிக்கப்பட்டதோடு, 640 இற்கும் மேற்பட்ட உயிரிழப்புகள் பதிவாகின.

இதன்போது இலங்கைக்கு முதன்முதலில் உதவிய நாடாக இந்தியா, நவம்பர் 28 அன்று சாகர் பந்து எனும் நிவாரணச் சேவையை ஆரம்பித்தது.

இதனைத் தொடர்ந்து, டிசெம்பர் 23ஆம் திகதி இலங்கைக்கு விஜயம் செய்த இந்திய வெளிவிவகார அமைச்சர் கலாநிதி எஸ்.ஜெய்சங்கர் இந்த 450 மில்லியன் டொலர் நிவாரணப் பொதியை அறிவித்தார்.

இதில் 350 மில்லியன் அமெரிக்க டொலர் சலுகை அடிப்படையிலான கடன் வசதி மற்றும் 100 மில்லியன் அமெரிக்க டொலர் நன்கொடைகள் உள்ளடங்குகின்றன.

இந்தச் சந்திப்பின் போது, தற்போது இலங்கையில் நடைமுறையிலுள்ள ஏனைய இருதரப்புத் திட்டங்களின் முன்னேற்றம் குறித்தும் ஆராயப்பட்டது. குறிப்பாக வீடமைப்பு, சுகாதாரம், நீர் வழங்கல், உட்கட்டமைப்பு மற்றும் தொழில்நுட்பத் துறைகளில் பல இந்தியத் திட்டங்கள் ஏற்கனவே முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அத்துடன், நவீன நிதிச் சட்டகங்கள் மற்றும் சைபர் பாதுகாப்புத் துறைகளில் இரு நாடுகளுக்கும் இடையிலான ஒத்துழைப்பு குறித்தும் இதன்போது கருத்துப் பரிமாறப்பட்டதாக தூதுவர் மேலும் தெரிவித்துள்ளார். (அ)

# வாக்காளர் பட்டியலை சரி பார்க்க காலக்கெடு

கொழும்பு, மே. 12

2026ஆம் ஆண்டுக்கான வாக்காளர் இடாப்பு தொடர்பான உரிமைக் கோரிக்கைகள் மற்றும் ஆட்சேபனைகளை சமர்ப்பிப்பதற்கான காலக்கெடு எதிர்வரும் ஜூன் மாதம் 5ஆம் திகதி வரை நிர்ணயிக்கப்பட்டுள்ளதாக தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் ஆர்.எம்.ஏ.எல். ரத்நாயக்க தெரிவித்தார்.

வாக்காளர் இடாப்பின் ஆரம்ப வரைவு தற்போது பொதுமக்களின் பார்வைக்காக பகிரங்கப்படுத்தப்பட்டுள்ளது.

வாக்காளர்கள் தமது விவரங்கள் இடாப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதை மாவட்ட தேர்தல் அலுவலகங்கள் மற்றும் கிராம உத்தியோகத்தர் அலுவலகங்களில் சரிபார்க்க முடியும்.

மக்களின் வசதிக்காக தேசிய தேர்தல் ஆணைக்குழுவின் உத்தியோகபூர்வ இணையத் தளத்திலும் வாக்காளர் இடாப்பினைப் பார்வையிடும் வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இடாப்பில் பெயர்கள் விடுபட்டிருப்பின் அல்லது தகவல்களில் ஏதேனும் திருத்தங்கள் இருப்பின், அவற்றை உரிய காலப்பகுதிக்குள் சமர்ப்பிக்குமாறு ஆணைக்குழுவின் தலைவர் கேட்டுக்கொண்டுள்ளார். (அ)

# சர்வதேச பாராளுமன்ற ஒன்றியத்திடம் சபாநாயகருக்கு எதிராக முறைப்பாடு!

கொழும்பு, மே. 12

அரசாங்கத்தின் 2.5 மில்லியன் அமெரிக்க டொலர் நிதி மோசடி தொடர்பான உண்மைகளை மறைக்க முயற்சிப்பதாகக் குற்றம்சாட்டி, சபாநாயகர் ஜகத் விக்ரமரத்னவின் செயல்பாடு கள் குறித்து சர்வதேச பாராளு மன்ற ஒன்றியத்திடம் ஐக்கிய மக்கள் சக்தி உத்தியோகபூர்வமாக முறையிட்டுள்ளது.

பாராளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகரவினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள இந்த முறைப்பாட்டில், எதிர்க்கட்சி உறுப்பினர்களின் ஜனநாயக உரிமைகளைச் சபாநாயகர் திட்டமிட்டுப் பறிப்பதாகச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

திறைசேரி நிதி மோசடி விவ காரத்தில், திறைசேரி செயலா ளர் ஹர்ஷன சூரியப்பெருமவுக்கு எதிராக முன்வைக்கப் பட்ட சிறப்புரிமை மீறல் பிரேர ணையைச் சபாநாயகர் நிராக ரித்தமை, பாராளுமன்றத்தின் மேற்பார்வை அதிகாரத்தை வலுவிழக்கச் செய்யும் செயல் என அவர் சாடியுள்ளார்.

பொது நிதியைக் கையாள்வதில் அரசியலமைப்பு விதிகள் மீறப்பட்டுள்ளமை மற்றும் சுமார் 2.5 மில்லியன் டொலர் நிதியைத் தவறாகப் பயன்படுத்தியமை போன்ற பாரிய குற்றச்சாட்டுகள் குறித்து விவாதிக்க இடமளிக்கப்படாமை ஜனநாயகத்துக்குப் பெரும் அச்சுறுத்தல் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

சபாநாயகரின் இந்த ஒருதலைப்பட்சமான போக்கைச் சர்வதேச ரீதியில் அம்பலப்படுத்தவும், எதிர்க்கட்சியினரின் உரிமைகளைப் பாதுகாக்கவும் சர்வதேச பாராளுமன்ற ஒன்றியம் உடனடியாகத் தலையிட வேண்டும் எனத் தயாசிறி ஜய சேகர தனது கடிதத்தில் வலியு றுத்தியுள்ளார். (அ)

# பலத்த மின்னல் எச்சரிக்கை

கொழும்பு, மே 12

சப்ரகமுவ, மத்திய, ஊவா, வடமத்திய மற்றும் கிழக்கு மாகாணங்களுக்கும் குருநாகல், முல்லைத்தீவு, மன்னார் மற்றும் வவுனியா மாவட்டங்களுக்கும் பலத்த மின்னல் தாக்கம் குறித்த எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இதன்படி குறித்த பிரதேசங்களில் பிற்பகல் ஒரு மணிக்கு பின்னர் இடியுடன் கூடிய மழையுடன் பலத்த மின்னல் தாக்கம் ஏற்படக் கூடும்.

இவ்வேளைகளில் தற்காலிகமாக பலத்த காற்று வீசக் கூடும் என்பதால், மின்னல் விபத்துக்களைக் குறைத்துக் கொள்ளத் தேவையான நடவ டிக்கைகளை எடுக்குமாறு வளிமண்டலவியல் திணைக் களம் பொதுமக்களை கேட்டுக் கொண்டுள்ளது.(எ)

# தமிழகத்தில் புதிய யுகம் விஜய்க்கு சஜித் வாழ்த்து!

கொழும்பு, மே. 12

தமிழக சட்டமன்றத் தேர்தலில் வெற்றி பெற்று, தமிழகத்தின் புதிய அத்தியாயத்தைத் தொடங்கியுள்ள நடிகர் மற்றும் அரசியல்வாதியான விஜய்க்கு, இலங்கையின் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தனது மனமார்ந்த வாழ்த்துகளைத் தெரிவித்துள்ளார்.

சமூக வலைத்தளங்கள் வாயிலாக அவர் வெளியிட்டுள்ள வாழ்த்து செய்தியில், விஜய்யின் வெற்றி, சமூக நீதி மற்றும் மதச்சார்பின்மையை அடிப்படையாகக் கொண்ட ஒரு புதிய யுகத்தின் ஆரம்பம் என சஜித் பிரேமதாஸ குறிப்பிட்டுள்ளார்.

சமூகத்தில் சகவாழ்வு, நீதி மற்றும் ஸ்திரத்தன்மையின் முக்கியத்துவத்தை இந்த வெற்றி பறைசாற்றுவதாக அவர் தெரிவித்துள்ளார்.

"கோபம் மற்றும் பழைய காயங்களின் அடிப்படையில் கட்டியெழுப்பப்படும் சமூகங்கள் இறுதியில் தனிமைப்படுத்தப்படும் என்பதை வரலாறு நமக்குக் கற்பித்துள்ளது. ஆனால், நீதி மற்றும் சகவாழ்வின் அடிப்படையில் அமையும் சமூகங்களே மக்கள் விரும்பும் எதிர்காலத்தை உருவாக்கும்," என சஜித் சுட்டிக்காட்டியுள்ளார்.

மொழி, மதம் அல்லது அடையாளம் எதுவாக இருந்தாலும், பிராந்தியத்தில் உள்ள அனைத்து மக்களும் சமூக மேம்பாடு, நீதி மற்றும் ஸ்திரத்தன்மையையே எதிர்பார்க்கிறார்கள்.

நமக்கிடையிலான பிரிவினைகளை விட, பொதுவான இணக்கப்பாடுகளே அதிகம் உள்ளன என்பதையும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

தமிழகத்தின் இந்தப் புதிய அரசியல் அத்தியாயம், மற்றவர்கள் இடைவெளியை உருவாக்கிய இடங்களில் புரிதலை ஏற்படுத்தும் ஞானத்தையும், இரக்கத்தையும், முன்னேற்றத்தையும் கொண்டு வரும் என தான் நம்புவதாகவும் சஜித் தனது வாழ்த்துச் செய்தியில் மேலும் குறிப்பிட்டுள்ளார். (அ)

# யாழ். மாவட்ட சுகாதார ஒருங்கிணைப்பு அதிகாரியாக சிறீபவானந்தராசா எம்.பி.

யாழ்ப்பாணம், மே. 12

யாழ்ப்பாணம் மாவட்ட சுகாதார ஒருங்கிணைப்பு அதிகாரியாக பாராளுமன்ற உறுப்பினர் ச. சிறீபவானந்தராசா நியமிக்கப்பட்டுள்ளார்.

அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் சுகாதாரம் மற்றும் வெகுஜன ஊடக அமைச்சர், டாக்டர் நளிந்த ஜயதிஸ்ஸவினால் இந்த நியமனம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்தப் புதிய முறையின் மூலம் சுகாதார சேவைகளின் தரத்தை மேம்படுத்தி வினைத்திறனான சேவையை வழங்குவதை சுகாதார மற்றும் வெகுஜன ஊடக அமைச்சு பிரதான நோக்கமாக கொண்டுள்ளது.

மத்திய அரசுக்கும் மாகாண சபைகளின் கட்டுப்பாட்டில் உள்ள சுகாதார சேவை நிறுவனங்களுக்கும் இடையே தற்போதுள்ள ஒருங்கிணைப்புக் குறைபாடுகளைக் களைவதன் மூலம், மேலும் திறமையான சேவைகளை மேம்படுத்துவதே இந்த நடவடிக்கையின் முதன்மை நோக்கமாகும்.

மேலும், முந்தைய அமைப்பின் கீழ், உள்ளூர் மட்டத்தில் சுகாதாரப் பிரச்சினைகளை முறையாகக் கண்டறிவதிலும், அவற்றை தேசியத் திட்டங்களில் இணைப்பதிலும் சில நடைமுறைச் சிக்கல்கள் எழுந்தன.

இவ்வாறு நியமிக்கப்பட்ட மாவட்ட ஒருங்கிணைப்பு அலுவலர்களுக்கு ஒதுக்கப்பட பணிகள் மற்றும் பொறுப்புகளும் முன்மொழியப்பட்டுள்ளன

அவையாவன,மாவட்ட அளவில் சுகாதாரத் தேவைகளைக் கண்டறிந்து, பொதுமக்களின் பங்கேற்புக்கு முன்னுரிமை அளித்து, அவற்றுக்கு முன்னுரிமை அளித்தல் அந்தத் தேவைகளைத் தேசிய மற்றும் மாகாண சுகாதாரத் திட்டங்களுடன் ஒருங்கிணைக்க உதவுதல்

வளங்களின் திறமையான பயன்பாட்டையும், துறைசார் மற்றும் மாகாண சுகாதார நிறுவனங்களுக்கு இடையேயான ஒருங்கிணைப்பையும் வலுப்படுத்துதல்,அமைச்சின் கொள்கைகளுக்கு இணங்க பிராந்திய வளர்ச்சித் திட்டங்களைச் செயல்படுத்துவதை ஒருங்கிணைத்தல்

முன்னுரிமைத் திட்டங்களைக் கண்டறிந்து அவற்றை அமைச்சுக்கு பரிந்துரைத்தல்

தற்போது செயல்படுத்தப்பட்டு வரும் திட்டங்களின் முன்னேற்றத்தைக் கண்காணித்து, நிர்ணயிக்கப்பட்ட காலக்கெடுவுக்குள் அவற்றை வெற்றிகரமாக முடிக்க உதவுதல் உள்ளிட்ட பணிகளும் பொறுப்புக்களும் வழங்கப்பட்டுள்ளன. (அ)

# மருத்துவ கல்விக்கான தேசியக் கொள்கையை வரைவதற்கென விசேட நிபுணர் குழு நியமனம்

கொழும்பு, மே. 12

இலங்கையில் மருத்துவக் கல்விக்கான புதிய தேசியக் கொள்கையை வரைவதற்கென 15 உறுப்பினர்களைக் கொண்ட விசேட நிபுணர் குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் பேராசிரியர் இந்திக மகேஷ் கருணாதிலக்க தலைமையிலான இந்தக் குழு, நாட்டின் தற்போதைய மற்றும் எதிர்காலத் தேவைகளுக்கு ஏற்ற வகையில் மருத்துவக் கல்வித் தரத்தை வலுப்படுத்துவதற்கான ஆலோசனைகளை வழங்கவுள்ளது தேசிய முக்கியத்துவம் வாய்ந்த இந்த நடவடிக்கையானது மருத்துவக் கல்வித் துறையில் நிலவும் சவால்களை எதிர்கொள்ளவும், அதனை நவீனப்படுத்தவும் உதவும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது இதற்கான நியமனங்களை கல்வி அமைச்சின் செயலாளர் நாலக்க கலுவெவ உத்தியோக பூர்வமாக அறிவித்துள்ளார். (அ)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஈழநாடு
Eelanadu
11.05.2026 செவ்வாய்க்கிழமை
பராபவ வருடம், சித்திரை 25

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com

# விஜய்யிடம் தமிழ் அரசியல்வாதிகளின் எதிர்பார்ப்புக்கள்

கடந்த வாரம் தமிழ்நாடு சட்டசபை தேர்தல் முடிவுகள் வெளிவரத் தொடங்கிய நேரத்தில் இருந்து தமிழக வெற்றிக் கழக தலைவர் ஜோசப் விஜய்யை விட்டால் இலங்கைத் தமிழர்களுக்கு வேறு கதியே இல்லை என்ற தோரணையில் எமது தமிழ் அரசியல்வாதிகள் அவரிடம் வேண்டுகோள்களை விடுக்கத் தொடங்கினர்.

சட்டசபையில் அறுதிப் பெரும்பான்மை ஆசனங்கள் கிடைக்காமல், திராவிட முன்னேற்றக் கழகத்தின் கூட்டணி கட்சிகளின் ஆதரவுடன் அரசாங்கத்தை அமைத்து அவர் முதலமைச்சராக பதவியேற்ற பிறகு தமிழ் அரசியல்வாதிகள் மேலும் வலிமையான கோரிக்கைகளை முன்வைக்கிறார்கள்.

இனப்படுகொலைக்கு சர்வதேச நீதியைப் பெற்றுத் தாருங்கள்' முள்ளிவாய்க்கால் இனவழிப்பை நினைவு கூரும் வகையில் மே 18 ஆம் திகதியை முள்ளிவாய்க்கால் இனவழிப்பு நாளாக பிரகடனம் செய்து சட்டசபையில் தீர்மானம் நிறைவேற்றுங்கள்' வளமான தமிழகத்தை மாத்திர மல்ல, வளமான ஈழத்தை அமைப்பதற்கும் விஜய் ஒத்துழைக்க வேண்டும்' இந்த வகையாக கோரிக்கைகள் அமைகின்றன.

ஜெயலலிதா முதலமைச்சராக இருந்தபோது 13 வருடங்களுக்கு முன்னரும் ஈழத் தமிழர்களுக்கு நேர்ந்த இன அழிப்புக்கு குறித்து சர்வதேச விசாரணை அவசியம் என்று சட்டசபையில் தீர்மானம் நிறைவேறியது. ஜெயலலிதாவின் காலத்தில்தான் இலங்கைத் தமிழர் பிரச்சினைக்கு தனிநாடு தான் நிரந்தரத் தீர்வு என்றும் ஒரு தீர்மானம் நிறைவேற்றியதாகவும் நினைவு.

எமது தமிழ் அரசியல்வாதிகளின் கோரிக்கைகளுக்கு புதிய முதலமைச்சர் எப்போது, எந்த வகையான பதில்களை வழங்குவாரோ தெரியவில்லை. கச்சதீவை இந்தியா மீண்டும் சொந்தமாக்க வேண்டும் என்று விஜய் ஒரு தடவை விடுத்த கோரிக்கையை நினைவுபடுத்தி தென்னிலங்கையின் சில அரசியல்வாதிகள் எச்சரிக்கை செய்யத் தொடங்கிவிட்டனர். சில பத்திரிகைகள் இது தொடர்பில் ஆசிரிய தலையங்கங்களையும் எழுதியிருக்கின்றன.

இது தவிர, விஜய்யின் "கட் அவுட்டுக்கு" ஏற்கெனவே பாலாபிசேகம் செய்த ஒரு கூட்டமும் வடக்கில் இருக்கிறது. அதன் எதிர்பார்ப்புகள் என்னவோ யாறறிவர்.

விஜய் நடைமுறைச் சாத்தியத்தைப் பற்றி எள்ளளவேனும் சிந்திக்காமல் தேர்தல் பிரசாரங்களின்போது திராவிட கட்சிகளுடன் ஏட்டாக்கு போட்டியாக ஏலம் கோருவது போன்று "இலவசங்கள் குறித்து வாக்குறுதிகளை அள்ளி வீசியிருந்தார்.

திராவிட கட்சிகள் ஆசைகாட்டி அள்ளிவீசிய "இலவச" வாக்குறுதிகள் எந்த இலட்சணத்தில் காப்பாற்றப்பட்டன என்பதை அனுபவ ரீதியாகக் கண்ட தமிழக மக்கள் விஜய்யின் வாக்குறுதிகளை நம்பி அவரை ஆட்சிக்கு கொண்டு வந்திருக்கிறார்கள்.

60 வயது வரையிலான பெண்களுக்கு மாதாந்தம் 2500 ரூபா உதவித் தொகை' மாநிலம் முழுவதும் பெண்களுக்கு இலவச பேரூந்துப் பயணம்'. ஒவ்வொரு குடும்பத்துக்கும் வருடத்துக்கு ஆறு இலவச சமையல் எரிவாயு சிலிண்டர்கள்' மணப் பெண்களுக்கு ஒரு சவரன் தங்கமும் உயர்தர பட்டுச் சேலையும் பரிசு என்று விஜய் அறிவித்த இலவசங்கள் நீள்கின்றன.

முதலமைச்சராக பதவியேற்ற தினமே தனது வாக்குறுதிகளை நிறைவேற்றுவதில் உள்ள சிக்கல்களை உணர்ந்தவராக விஜய் உணர்ச்சிவசப்பட்ட நிலையில், முன்னைய ஆட்சியாளர்கள் "கஜானவை காலி செய்துவிட்டுப் போயிருக்கிறார்கள்" என்று பேசியதை. பார்த்தோம். அவர் தனக்கு வரப்போகின்ற நெருக்கடிகள் பற்றி சிந்தித்துக் கொண்டிருக்கும்போது, நடைமுறைச் சாத்தியமற்ற கோரிக்கைகளை முன்வைபய்பதில் சளைக்காத எமது தமிழ் அரசியல்வாதிகள் அவருக்கு மேலும் சுமைகளை ஏற்றுகிறார்கள்.

அதுபோக, பாயும் புலியின் படத்தை வைத்தே படங்காட்டி இறுதியில் கட்டுப் பணத்தையும் இழந்த சீமானுடன் தொடர்பு கொண்டு இவர்கள் ஆறுதல் சொன்னதாக இதுவரையில் செய்தி வந்ததாக இல்லை.

# மின்சார கட்டண அதிகரிப்பு தடுத்திருக்கக்கூடிய ஒன்று!

## பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு மீது மின்சார நுகர்வோர் சங்கம் குற்றச்சாட்டு

கொழும்பு, மே. 12

இலங்கையில் நேற்று முதல் நடைமுறைக்கு வந்துள்ள மின்சாரக் கட்டண அதிகரிப்பானது, பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு தனது ஒழுங்குமுறைப் பணிகளைச் சரியாகச் செய்திருந்தால் தடுத்திருக்கக் கூடிய ஒன்று என மின்சார நுகர்வோர் சங்கம் தெரிவித்துள்ளது.

இது குறித்து அந்தச் சங்கத்தின் பொதுச் செயலாளர் சஞ்சீவ தம்மிக ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையில், கடந்த பல வருடங்களாக ஆணைக்குழு தனது பொறுப்புகளை நிறைவேற்றத் தவறியுள்ளதாகக் குற்றம் சாட்டினார்.

மேலும் இலங்கை மின்சார சபை மற்றும் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் ஆகியவற்றுக்கு இடையேயுமுறையான எரிபொருள் கொள்வனவு ஒப்பந்தங்களைச் செய்யுமாறு கடந்த மூன்று வருடங்களாக ஆணைக்குழு உத்தரவிட்ட போதிலும், அவை நடைமுறைப்படுத்தப்படவில்லை.

இதற்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க ஆணைக்குழுத் தவறிவிட்டது.

மின் உற்பத்திக்கான எரிபொருளைக் குறைந்த விலையில் வாங்கிச் சேமிப்பதற்கான போதிய வசதிகளை ஏற்படுத்த மின்சார சபைக்கு ஆணைக்குழு வழிகாட்டவில்லை. போதிய களஞ்சிய வசதிகள் இருந்திருந்தால், விலை உயரும் போது அதிக விலைக்கு எரிபொருள் வாங்குவதைத் தவிர்த்திருக்கலாம் எனவும் தெரிவித்தார்.

நாட்டின் நீண்டகால மின் உற்பத்தித் திட்டங்கள் முறையாக நடைமுறைப்படுத்தப்படுவதில்லை. குறைந்த செலவில் மின்சாரத்தை உற்பத்தி செய்யக்கூடிய திட்டங்கள் குறித்து ஆணைக்குழு உரிய கண்காணிப்பைச் செய்யவில்லை.

அரசாங்கம் புதுப்பிக்கத்தக்க எரிசக்தித் துறையை ஊக்குவிக்காதது குறித்து ஆணைக்குழு மௌனம் காக்கின்றது. சூரிய மற்றும் காற்றாலை மின் உற்பத்தி விரிவாக்கப்பட்டிருந்தால், டீசல் மூலமான மின் உற்பத்தியைச் சார்ந்திருக்கவேண்டிய நிலை ஏற்பட்டிருக்காது எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (அ)

# தெனியாயவில் வைரஸ் காய்ச்சல் பரவல் குடிதண்ணீர் நிலைகள் பாதுகாப்பற்றவை

கொழும்பு, மே. 12

தெனியாய நகரம் மற்றும் பாடசாலைகளுக்கு நீர் விநியோகம் செய்யும் நீர் நிலைகள் பாதுகாப்பற்ற நிலையில் உள்ளதாக தென் மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் என்.ஜி. எஸ். பண்டிதரத்ன தெரிவித்துள்ளார்.

தெனியாய பகுதியில் தற்போது பரவி வரும் வைரஸ் காய்ச்சல் தொடர்பாக ஆராய்வதற்காக நியமிக்கப்பட்ட விசேட மருத்துவ நிபுணர்கள் குழுவினர் முன்னெடுத்த விசாரணைகளின்போதே இந்த விடயம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இதேவேளை, அடையாளம் காணப்பட்ட நீர் நிலைகளில் தற்போது குளோரின் இடும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

குறித்த பகுதியில் பரவி வரும் வைரஸ் காய்ச்சலினால் இதுவரை 50 நோயாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் குறிப்பிட்டார். (அ)

## நாடு முழுக்க ரூ. 23,000...

நோக்கமாகக் கொண்டு, அரசாங்கத்தின் முதன்மைத் திட்டமாகச் செயற்படுத்தப்படும் "சமூக சக்தி" தேசிய திட்டத்தின் முன்னேற்றத்தை இங்கு ஆராய்ந்த ஜனாதிபதி, இத்திட்டத்தின் மூலம் கிடைக்கும் நன்மைகள் மற்றும் மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதில் இது எந்தளவு பங்களிப்பு செய்கிறது என்பது குறித்து தொடர்ச்சியான மீளாய்வு நடவடிக்கைகளை மேற்கொள்வதன் அவசியத்தை சுட்டிக்காட்டினார்.

கிராம உத்தியோகத்தர் பிரிவு மட்டத்தில் இதுவரை 13,977 சமூக அபிவிருத்தி சபைகள் நிறுவி முடிக்கப்பட்டுள்ளதாக இங்கு சுட்டிக்காட்டிய அதிகாரிகள், அந்தச் சபைகளுக்காக வழங்கப்பட்டுள்ள நிதி ஒதுக்கீடுகள் குறித்தும் ஜனாதிபதிக்கு விளக்கமளித்தனர்.

"சமூக சக்தி" தேசிய திட்டத்தைச் செயற்படுத்துவதற்காக தகவல் தொழில்நுட்ப உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் நோக்கில், பிரதேச செயலகங்கள் மற்றும் மாவட்ட மட்டத்தில் நிறுவப்பட்டுள்ள சமூக சக்தி பிரிவுகளுக்குத் தேவையான வசதிகளை வழங்குவதற்கு எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் குறித்தும், சமூக அபிவிருத்தி சபை அதிகாரிகளுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்காக 25 மாவட்டங்களையும் உள்ளடக்கிய வகையில் முன்னெடுக்கப்படும் பயிற்சித் திட்டங்கள் குறித்தும் இதன்போது ஜனாதிபதிக்கு விளக்கமளிக்கப்பட்டது.

கிராமிய அபிவிருத்தி, சமூக பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டுகை அமைச்சர் உபாலி பன்னிலகே, கிராமிய அபிவிருத்தி, சமூக பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டுகை பிரதி அமைச்சர் வசந்த பியதிஸ்ஸ, ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமாநாயக்க, கிராமிய அபிவிருத்தி, சமூக பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டுகை அமைச்சின் செயலாளர் சம்பத் மந்திரிநாயக்க, ஜனாதிபதியின் சிரேஷ்ட மேலதிக செயலாளர் கபில ஜனக பண்டார , கிராமிய அபிவிருத்தி, சமூக பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டுகை அமைச்சின் சிரேஷ்ட அதிகாரிகள் உள்ளிட்ட பலரும் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர். (அ)

## தமிழக அரசியலில்...

நிலையை மாற்றி, தமிழகத்தின் அரசியல் பண்பாட்டையும் மரபையும் மீட்டெடுக்கும் வகையில் முதலமைச்சர் விஜய் செயல்பட்டு வருவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

பதவியேற்பதற்கு முன்பாகவே இடதுசாரித் தலைவர் களைச் சந்தித்து நன்றி தெரிவித்த விஜய், தற்போது திரா விடர் கழகத் தலைவர் கி.வீரமணி, முன்னாள் முதலமைச் சர் மு.க.ஸ்டாலின் மற்றும் வைகோ உள்ளிட்டோரைச் சந்தித்து வருவது பாராட்டுக்குரியது என அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து கருத்து தெரிவித்துள்ள தமிழ்நாடு காங் கிரஸ் குழு தலைவர் செல்வப்பெருந்தகை, முதலமைச்சர் விஜய்யின் இந்தச் செயல்பாட்டை "அரசியல் நாகரிகம்" என வெகுவாகப் பாராட்டியுள்ளார்.

"முன்னாள் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் உள்ளிட்ட மூத்த தலைவர்களை நேரில் சந்தித்து வாழ்த்துப் பெறும் முதலமைச்சர் ஜோசப் விஜயின் அரசியல் நாகரிகம் மிக வும் பாராட்டுக்குரியது. இந்த அணுகுமுறை தொடர்ந்து ஒரு நல்லாட்சிக்கும், ஆரோக்கியமான ஜனநாயகத்திற்கும் வழிவகுக்கும் என நான் உறுதியாக நம்புகிறேன்" என அவர் தெரிவித்துள்ளார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

மே - 12 செவ்வாய்க்கிழமை
பராபவ வருடம் - சித்திரை 29
நல்ல நேரம் : 07.31 - 09.00
ராகு காலம் : 03.00 - 04.00
திதி : ஏகாதசி




**மேடம்**
வெளிவட்டாரத்தில் அந்தஸ்து உயரும். பழைய கடன் பிரச்னை கட்டுப்பாட்டிற்குள் வரும். குடும்பத்தினருடன் சுப நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வீர்கள். வேற்று மதத்தவர் உதவுவார்.

**இடபம்**
பொதுக் காரியங்களில் ஈடுபடுவீர்கள். உடன்பிறந்தவர்கள் ஒத்தாசையாக இருப்பார்கள். எதிர்பார்ப்புகள் நிறைவேறும். உங்களால் பயனடைந்தவர்கள் உங்களுக்கு உதவி செய்வார்கள்.

**மிதுனம்**
கணவன்-மனைவிக்குள் இருந்த மோதல்கள் நீங்கி மகிழ்ச்சி அதிகரிக்கும். பணவரவு திருப்தி தரும். புதியவர்கள் நண்பர்களாவார்கள். வெளிவட்டாரத்தில் புது அனுபவம் உண்டாகும்.

**கடகம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் புதிய முயற்சிகள் தள்ளிப் போய் முடியும். குடும்பத்தில் சிறு வார்த்தைகள் கூட பெரிய தகராறில் முடியும். கவனம் தேவைப்படும் நாள்.

**சிம்மம்**
சவாலாக தெரிந்த சில வேலைகள் சாதாரணமாக முடியும். பிள்ளைகளால் அந்தஸ்து உயரும். கல்யாணப் பேச்சு வார்த்தை சாதகமாக முடியும். மனைவி வழியில் நல்ல செய்தி உண்டு.

**கன்னி**
குடும்பத்தினர் உங்கள் ஆலோசனையை ஏற்றுக் கொள்வார்கள். அரசால் அனுகூலம் உண்டு. வழக்கில் நல்ல தீர்ப்பு வரும். அதிகாரப் பதவியில் இருப்பவர்கள் உதவுவார்கள்.

**துலாம்**
பிள்ளைகளின் வருங்காலத் திட்டத்தில் ஒன்று நிறைவேறும். ஆடம்பரச் செலவுகளை குறைத்து சேமிக்கத் தொடங்குவீர்கள். புதிய சிந்தனைகள் மனதில் தோன்றும். நட்பு வட்டம் விரிவடையும்.

**விருட்சிகம்**
அரசு அதிகாரிகளின் உதவியால் சில காரியங்களை முடிப்பீர்கள். மகளுக்கு நல்ல வரன் அமையும். எதிர்பார்த்த வேலைகள் தடையின்றி முடியும். தடைகளை தாண்டி முன்னேறும் நாள்.

**தனுசு**
உடன்பிறந்தவர்கள் உங்கள் வேலைகளைப் பகிர்ந்துக் கொள்வார்கள். துணிச்சலாக சில முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள். விசேஷங்களை முன்னின்று நடத்துவீர்கள்.

**மகரம்**
இதுவரை இருந்த காரியத்தடைகள் நீங்கி குடும்பத்தில் மகிழ்ச்சி அதிகரிக்கும். வராது என்றிருந்த பணம் கைக்கு வரும். சுபநிகழ்ச்சிகளில் கலந்துக் கொள்வீர்கள். உறவினர்கள் மதிப்பார்கள்.

**கும்பம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் பல வேலைகளையும் நீங்களே பார்க்க வேண்டி வரும். நண்பர்கள் உறவினர்களால் செலவினங்கள் அதிகரிக்கும். சிறுசிறு அவமானங்கள் வந்து நீங்கும்.

**மீனம்**
சின்ன சின்ன வேலைகளையும் அலைந்து திரிந்து முடிக்க வேண்டி வரும். பிள்ளைகளால் டென்ஷன் அதிகரிக்கும். வாகனத்தில் அதிக கவனம் தேவை. பொறுமைத் தேவைப்படும் நாள்.

# மன்னார் மாவட்டத்தில் மணல் அகழ்வு அனுமதிப்பத்திரங்கள் இடைநிறுத்தம்

## புதிய சட்டக்கோவையின் கீழ் வழங்க தீர்மானம்

மன்னார், மே 12

மன்னார் மாவட்டத்தில் மணல் அகழ்வு அனுமதிப்பத்திரங்கள் தொடர்பில் எழுந்துள்ள சிக்கல் நிலைமையை அடுத்து, அனைத்து அனுமதிப்பத்திரங்களையும் தற்காலிகமாக நிறுத்தி வைக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

சட்டவிரோத மணல் கடத்தலை தடுத்தல், மணல் அகழ்வு அனுமதிப்பத்திரங்களை வழங்குதல் மற்றும் மணல் விலையை கட்டுப்படுத்துதல் தொடர்பில் அதிகாரிகள் மற்றும் மணல் வியாபாரிகளுக்கிடையில் மன்னார் மாவட்ட செயலகத்தில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற விசேட கலந்துரையாடலின் பின்னரே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

மணல் அகழ்வு அனுமதிப் பத்திரங்களை வழங்குவது புதிய சட்டக்கோவையின் கீழ் முன்னெடுக்கப்படும் என்று இது தொடர்பில் கருத்து வெளியிட்ட மாவட்ட அபிவிருத்திக்குழுத் தலைவரும், பிரதி அமைச்சருமான உபாலி சமரசிங்க தெரிவித்தார்.

இந்தக் கலந்துரையாடலின் போது, வறிய குடும்பங்கள் வீடு கட்டுவதற்காக 3 கியூப் மணலை 50,000 ரூபாய்க்கும், அரசாங்க கட்டுமானப் பணிகளுக்காக 3 கியூப் மணலை 65,000 ரூபாய்க்கும் வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், ஏனைய பிரதேச செயலக பிரிவுகளுக்கு மணல் கொண்டு செல்லும் போது, ஒரு கிலோ மீற்றருக்கு 350 ரூபாய் வீதம் மேலதிகமாக அறவிடுவதற்கு அனுமதி கோரப்பட்டுள்ளது.

மேலும், மணல் அனுமதிப் பத்திரங்களை வழங்கும் நடைமுறையில் புதிய சட்டதிட்டங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன. மாவட்ட செயலரின் இறுதி முடிவு மற்றும் மேற்பார்வையின் கீழ் அனுமதிப் பத்திரங்களை வழங்குவதற்கான புதிய விதிமுறைகள் தயாரிக்கப்படுவதாக புவியியல் ஆய்வு மற்றும் சுரங்கப் பணியகத்தின் பணிப்பாளர் தெரிவித்தார்.

இதன் மூலம் அனுமதிப்பத்திரங்களை வழங்கும் நடைமுறையில் முறையான ஒழுங்குமுறை ஏற்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (எ)

# வடக்கு, மேற்கு மாகாணத்தில் 100 மில்லி மீற்றர் மழைவீழ்ச்சி

கொழும்பு, மே 12

நாட்டை சூழவுள்ள பகுதிகளில் விருத்தியடைந்த கீழ் வளிமண்டலத் தளம்பல் நிலை அடுத்த 36 மணித்தியாலங்களில் ஒரு குறைந்த அழுத்த பிரதேசமாக வலுவடையக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது. எனவே, நாட்டில் தற்போது நிலவும் மழை நிலைமை அடுத்த சில நாட்களுக்கும் தொடரும் என்று எதிர்பார்க்கப்படுவதாக வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் வளிமண்டலவியல் திணைக்களம் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

நாட்டின் பெரும்பாலான பிரதேசங்களில் அவ்வப்போது மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுவ துடன் நாடு முழுவதும் மேக மூட்டமான வானம் காணப்ப டும் என எதிர்பார்க்கப்படுகிறது.

மேற்கு, சப்ரகமுவ, மத்திய, ஊவா, தெற்கு, வடமேல், வடக்கு மற்றும் வடமத்திய மாகாணங்களிலும் திருகோணமலை மாவட்டத்திலும் சில இடங்களில் 100 மில்லி மீற்றருக்கும் அதிகமான பலத்த மழைவீழ்ச்சி எதிர்பார்க்கப்படுகின்றது.

இடியுடன் கூடிய மழை பெய்யும் வேளைகளில் அப்பிரதேசங்களில் தற்காலிகமாக வீசக் கூடிய பலத்த காற்று மற்றும் மின்னல் தாக்கங்களினால் ஏற்படக்கூடிய பாதிப்புகளை குறைத்துக்கொள்ள தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ளுமாறு பொதுமக்கள் அறிவுறுத்தப்படுகின்றார்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)



கல்வியங்காடு ஞானபாஸ்கரோதய சங்கத்தின் 106ஆவது ஆண்டு நிறைவு விழாவும், கல்வி மற்றும் விளையாட்டு போட்டிகளில் வெற்றியீட்டியவர்களுக்கான பரிசளிப்பு நிகழ்வும் சங்கத்தின் தலைவர் கி. கிருஷ்ணதாசன் தலைமையில் சங்க மண்டபத்தில் நடைபெற்றது. இதில், பிரதம விருந்தினராக வடக்கு மாகாண ஆளுநர் நா. வேதநாயகன் கலந்து கொண்டார்.

## நீர்வேலியில் சுக்கிரவார சிறப்புச்சொற் பொழிவு

யாழ்ப்பாணம், மே 12

நீர்வேலி அருள்மிகு கந்த சுவாமி கோவில் நடத்தும் வாராந்தச் சுக்கிரவாரக் கந்த புராண படனத் தொடர் 52 வது சொற்பொழிவு கோவில் சண்முக விலாச மண்டபத்தில் எதிர்வரும் 15 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 05.30 மணிக்கு சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் நடைபெறவுள்ளது.

கோவிலின் பிரதம குருக்கள் ஸ்கந்தகுரு ஞானபானு, சிவசிறீ இராஜேந்திர சுவாமிநாதக்குருக்களின் ஆசியுரையை தொடர்ந்து தலைமையுரையை பரிபாலன சபைத் தலைவர் சி. தயாநாதனும் சிறப்புச்சொற்பொழிவினை இ பிரசங்கவாருதி ச. நவநீதன் "திருக்குற்றாலப் படலம்" என்னும் விடயப் பொருளில் சிறப்புச்சொற்பொழிவும் சொற்பொழிவிலிருந்து

நீர்வைக்கந்தன் புராண இதிகாசப் பாடசாலை மாணவர்களிடம் வினாக்கள் தொடுக்கப்பட்டுப் பாராட்டுப் பரிசில்கள் வழங்கப்படவுள்ளன.(எ)

## பன்னாலையில் திருமந்திர சொற்பொழிவு

யாழ்ப்பாணம், மே 12

பன்னாலை திருவருள்மிகு சிவபூதவராயர் ஆலயத்தில் சைவ வாழ்வியலில் திருமந்திரம் பெறும் முக்கியத்துவம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாக சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கம் நடத்தும் வாராந்தத் திருமந்திரச் சிறப்புச் சொற்பொழிவுத் தொடர் 05 எதிர்வரும் 15 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 04.00 மணிக்கு நடைபெறவுள்ளது. திருமூலநாயனார் குருபூஜையை அடுத்து மாணவர்களின் கலை நிகழ்வும், பிரசங்கபூஷணம் திருவாசகப்பிரியன் க. கைலநாதன் "முத்திக்கு வழிகாட்டும் ஞானக்களஞ்சியம் திருமந்திரம்" என்னும் சொற்பொழிவும் நடைபெறவுள்ளது.

சொற்பொழிவிலிருந்து மாணவர்களிடம் வினாக்கள் தொடுக்கப்பட்டுப் பாராட்டுப் பரிசில்கள் வழங்கப்படவுள்ளன. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# பிரபாகரனுக்கு அஞ்சாத மகிந்த விசாரணைக்கு அஞ்சமாட்டார்!

கொழும்பு, மே 12

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனுக்கே அஞ்சாத முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, சாதாரண விசாரணை ஆணைக்குழுக்களுக்கு முன்னால் முன்னிலையாக ஒருபோதும் தயங்கப்போவதில்லை.எனினும், விசாரணை அதிகாரிகளிடம் வழங்கும் சாதாரண வாக்குமூலத்தை விட, நீதிமன்றத்தினால் அங்கீகரிக்கப்படும் சத்தியக்கடதாசிக்கே அதிக சட்ட பெறுமானமும் சாட்சிய வலுவும் உள்ளது என்பதை சமூகமும் அதிகாரிகளும் புரிந்து கொள்ள வேண்டும் என்று சிறீலங்கா பொதுஜன பெரமுனவின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சஞ்ஜீவ எதிரிமான்ன தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று முன்தினம் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழு தற்பொழுது அழைத்துள்ளது. அவர் மிகவும் நிதானமாகவும் துணிச்சலாகவும் இந்த விசாரணைகளை எதிர்கொள்வார் என்பதில் எமக்கு எந்த ஐயமும் இல்லை.

ஆனால், இந்த விசாரணை முன்னெடுக்கப்படும் விதம் குறித்து நாம் கேள்வி எழுப்ப வேண்டியுள்ளது. சிறீலங்கா ஏர்லைன்ஸ் நிறுவனத்தின் முன்னாள் தலைமை நிர்வாக அதிகாரி கபில சந்திரசேன வழங்கியதாகக் கூறப்படும் ஒரு வாக்குமூலத்தின் அடிப்படையிலேயே இந்த அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் நிலவும் சட்ட முறைமைக்கு அமைய, பொலிஸார் அல்லது விசாரணை அதிகாரிகள் முன்னிலையில் அளிக்கப்படும் வெறும் வாக்குமூலங்களுக்கு மிகக் குறைந்த அளவிலான சட்ட மதிப்பே உள்ளது. ஆனால், ஒரு நபர் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கும் சத்தியக்கடதாசி என்பது மிகவும் சக்திவாய்ந்ததும் பாரதூரமானதுமான சாட்சியமாகும்.

கபில சந்திரசேன ஏற்கனவே ஒரு சத்தியக்கடதாசியை சமர்ப்பித்துள்ளார். அதில், இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக் குழுவின் பணிப்பாளர் நாயகம் தமக்கு கடுமையான அழுத்தம் கொடுத்ததாக பகிரங்கமாகக் குற்றம் ட்டியுள்ளார் என்றும் அவர் கூறினார். (எ)

# கட்டுத்துப்பாக்கி வெடித்து நபர் ஒருவர் உயிரிழப்பு!

## சந்தேகநபர் ஒருவர் கைது

அநுராதபுரம், மே 12

அநுராதபுரம் - திரப்பனை பகுதியில் உள்ள பயிர்ச்செய்கை நிலம் ஒன்றில் அமைக்கப்பட்டிருந்த கட்டுத்துப்பாக்கி வெடித்ததில் நபர் ஒருவர் உயிரிழந்தார். இந்தச் சம்பவம் தொடர்பில் கட்டுத்துப்பாக்கியை பொருத்திய சந்தேகநபர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

திரப்பனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட உட்டிமடுவ பகுதியில் சனிக்கிழமை இரவு இடம்பெற்ற இந்த சம்பவம் குறித்து திரப்பனை பொலிஸாருக்கு கிடைத்த தகவலைய டுத்து விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டன. இந்தச் சம்பவத்தில் உயிரிழந்தவர் 54 வயதுடைய உட்டிமடுவ பகுதியை சேர்ந்தவர் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

கட்டுத்துப்பாக்கியை பொருத்திய சந்தேகநபர் கைது செய்யப்பட்டதுடன்,

உயிரிழந்த நபரால் மிருகங்களை வேட்டையாடு வதற்காகப் பயன்படுத்தப்பட் டதாக தெரிவிக்கப்படும், உள் நாட்டில் தயாரிக்கப்பட்ட துப் பாக்கி ஒன்றும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளது. (எ)

# வெல்லவாயா - கொழும்பு வீதியில் பல இடங்களில் வெள்ளப்பெருக்கு

கொழும்பு, மே 12

வெல்லவாயா மற்றும் அதன் சுற்றுவட்டாரப் பகுதிகளில் ஞாயிற்றுக்கிழமை இரவு பெய்த கனமழை காரணமாக, வெல்லவாயா பகுதியில் உள்ள வெல்லவாயா - கொழும்பு பிரதான வீதியில் பல இடங்களில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது.

வெல்லவாயா கங்காராமய கோயில் மற்றும் எத்திலிவெவ பகுதிகளில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டதால் அந்த பகுதியில் போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளது. (எ)

நாட்டில் கடும் மழையினால்

# 14 நீர்த்தேக்கங்களின் வான் கதவுகள் திறப்பு

கொழும்பு, மே 12

நாட்டில் பெய்து வரும் கடும் மழை காரணமாக தற்போது 9 பிரதான நீர்த்தேக்கங்களும், 5 நடுத்தர நீர்த்தேக்கங்களும் நீர்மட்டம் அதிகரித்து வருவதாக நீர்ப்பாசனத் திணைக்களம் அறிவித்துள்ளது.

இது குறித்து நீர்ப்பாசனப் பணிப்பாளர் எஸ்.டி. ஹேரத் கருத்து தெரிவிக்கையில்,

அம்பாந்தோட்டை மாவட்டத்தின் லுனுகம்வெஹேர, மொனராகலை மாவட்டத்தின் வெஹெரகல, அநுராதபுரம் மாவட்டத்தின் ராஜாங்கனை மற்றும் குருநாகல் மாவட்டத்தின் தெதுறு ஓயா ஆகிய நீர்த்தேக்கங்கள் இவ்வாறு அதிகரித்து வருகின்றன.

தற்போதைய நிலவரப்படி, லுனுகம்வெஹேர நீர்த்தேக்கத்தின் 6 வான்கதவுகள் திறக்கப்பட்டு, அதனூடாக வினாடிக்கு 4000 கன அடிக்கும் அதிகமான நீர் கிரிந்தி ஓயாவுக்குள் வெளியேற்றப்பட்டு வருகின்றது. அதேபோன்று, வெஹெரகல நீர்த்தேக்கத்தின் 6 வான் கதவுகள் திறக்கப்பட்டு வினாடிக்கு 1400 கன அடி நீர் மாணிக்க கங்கையை நோக்கி விடப்படுகின்றது. மேலும், ராஜாங்கனை நீர்த்தேக்கத்தில் 8 வான்கதவுகள் திறக்கப்பட்டு வினாடிக்கு 9300 கன அடி நீர் கலா ஓயாவுக்கும், ஆதுரு ஓயா நீர்த்தேக்கத்தின் 4 வான்கதவுகள் ஊடாக வினாடிக்கு 5500 கன அடி நீர் ஆற்றுக்கும் திறந்து விடப்பட் டுள்ளது.

இதேவேளை, அலிகொட்ட ஆர நீர்த்தேக்கத்தின் 3 வான்கதவுகள் திறக்கப்பட்டு வினாடிக்கு 500 கன அடிக்கும் அதிகமான நீர் கிரிந்தி ஓயாவுக்குள் பாய்ந்து வருகின்றது.

இதன் காரணமாக, நீர்த்தேக்கங்களுக் குக் கீழே தாழ்நிலப்பகுதிகளில் வசிக்கும் மக்களும்,ஆற்றோரங் களில் உள்ள மக்களும் மிகவும் அவதானமாக இருக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர். நீர் வரத்து மற்றும் மழையின் அளவைப் பொறுத்து வான் கதவுகள் திறக்கப்படும் அளவு எந்த நேரத்திலும் மாற்றமடையலாம் என்பதால், இது தொடர்பான உத்தியோகபூர்வ அறிவித்தல் கள் குறித்து விழிப்புடன் இருக்குமாறு நீர்ப்பாசனத் திணைக்களம் பொதுமக்களைக் கேட்டுக் கொண்டுள்ளது- என்றார். (எ)

# இரும்புக்கம்பியால் அடித்து கொலை!

கொழும்பு, மே 12

எம்பிலிப்பிட்டிய - கொடிகந்த பகுதியில் கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டு ஒருவர் கொலை செய்யப்பட்டார்.

இந்தச் சம்பவத்தில் கொடிகந்த பகுதியைச் சேர்ந்த 52 வயதுடைய ஒருவரே உயிரிழந்தார்.

உயிரிழந்த நபருக்கும் மேலும் இருவருக்கும் இடையில் ஏற்பட்ட தர்க்கம் மோதலாக மாறியது. இதன்போது இரும்புக்கம்பியால் மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் குறித்த நபர் உயிரிழந்ததாக ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.

இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபர்களைக் கைது செய்வதற்காக எம்பிலிப்பிட்டிய பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.(எ)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# போதைப்பொருள் கடத்தல் குழுவுக்கு ஆறு நாட்கள் தடுப்புக்காவல் உத்தரவு

சம்மாந்துறை, மே 12

சுமார் 20 இலட்சத்துக்கும் அதிகமான ஐஸ் மற்றும் ஹெரோயின் போதைப்பொருள் கடத்தலில் ஈடுபட்ட குற்றச்சாட்டின் அடிப்படையில்கைதான இரண்டு சந்தேக நபர்களையும் ஆறு நாட்கள் தடுப்புக்காவலில் வைத்து விசாரணை மேற்கொள்ள சம்மாந்துறை நீதி வான் நீதிமன்று உத்தரவிட்டுள்ளது.

கடந்த சனிக்கிழமை இரவு அம்பாறை மாவட்டம் காரைதீவு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட புறநகர் பகுதியில் உள்ள சந்தேகத்துக்கிடமான வீடு ஒன்றில் இடம்பெற்ற சோதனை நடவடிக்கையின்போது குறித்த இரண்டு சந்தேக நபர்கள் அம்பாறை மாவட்ட ஊழல் தடுப்புப் பிரிவின் பொறுப்பதிகாரி எம். பிரியங்கர தலைமையிலான குழுவினரால்கைது செய்யப்பட்டிருந்தனர்.

பின்னர் ஞாயிற்றுக்கிழமை சம்மாந்துறை நீதிமன்ற நீதி வான் நூர்டீன் முஹம்மட் சர்ஜூன் முன்னிலையில் குறித்த வழக்கு விசாரணைக்கு எடுத் துக்கொள்ளப்பட்ட நிலையில் கைதான இரு சந்தேக நபர்களையும் 6 நாட்கள் தடுப்புக்காவலில் வைத்து விசாரணை மேற்கொள்ள உத்தரவிட்டார்.(எ)

# கச்சா எண்ணெய் விலை நேற்று மீண்டும் உயர்வு

கொழும்பு, மே 12

உலக சந்தையில் கச்சா எண்ணெய் விலை நேற்று மீண்டும் ஒருமுறை அதிகரித்துள்ளது.

போரை முடிவுக்கு கொண்டு வருவதற்கான அமெரிக்காவின் முன்மொழிவுக்கு ஈரான் அளித்த பதிலுக்கு அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் உடன்படாததே, கச்சா எண்ணெய் விலை மீண்டும் அதிகரிக்கக் காரணம் என்று சர்வதேச ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

இதன்படி, பிரெண்ட் வகை கச்சா எண்ணெய் பீப்பாய் ஒன்றின் விலை 104.1 டொலராகப் பதிவாகியுள்ளதுடன், டபிள்யூ.டி.ஐ. வகை கச்சா எண்ணெய் பீப்பாய் ஒன்றின் விலை 98.51 டொலராகவும் பதிவாகியுள்ளது.

(எ)

# மட்டு. மண்முனையில் தீப்பற்றி எரிந்த வான்!

மட்டக்களப்பு, மே 12

மட்டக்களப்பு- மண்முனை பகுதியில் பயணித்துக்கொண்டிருந்த வான் ஒன்று திடீரென தீப்பற்றி எரிந்துள்ளது.

இந்த தீ விபத்து நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இரவு இடம்பெற்றுள்ளது.

இந்த விபத்தில் எவருக்கும் எந்த விதமான பாதிப்புக்களும் ஏற்படவில்லை என்று மாவட்ட குற்ற விசாரணைப் பிரிவு பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

காத்தான்குடி பொலிஸ் பிரிவில் உள்ள கொக்கட்டிச்சோலை மண்முனை வீதியில் நேற்று முன்தினம் இரவு 7 மணியளவில் கொக்கட்டிச்சோலையிலிருந்து கட்டுநாயக்க விமான நிலையத்துக்குச் சென்றுகொண்டிருந்த போதே இந்த வான் தொழில்நுட்பக் கோளாறு காரணமாக தீப்பிடித்தது.

வானில் பயணித்த எவருக்கும் எந்த விதமான பாதிப்பும் ஏற்படவில்லை என கூறப்படுகிறது.

அத்துடன் வான் முற்றாக எரிந்ததாகவும் தடயவியல் பொலிஸ் பிரிவு வரவழைக்கப்பட்டு விசாரணைகள் இடம்பெற்று வருவதாகவும் குறித்த பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளில் காத்தான்குடி பொலிஸார் ஈடுபட்டு வருகின்றனர். (எ)

## ஐந்து மாவட்டங்களுக்கு மண்சரிவு எச்சரிக்கை

கொழும்பு, மே 12

நாட்டில் நிலவும் சீரற்ற வானிலையினால் ஐந்து மாவட்டங்களுக்கு முதலாம் நிலை மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப் பட்டுள்ளது என்று தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம் தெரிவித்துள்ளது.

இந்த எச்சரிக்கை அறிவிப்பு நேற்றுத் திங்கட்கிழமை இரவு 9.00 மணி வரை அமுலில் இருக்கும் என அந்த நிறுவனம் குறிப்பிட்டுள்ளது.

இதன்படி, பதுளை மாவட்டத்தின் பசறை, குருநாகல் மாவட்டத்தின் ரிதிகம, மாத்தளை மாவட்டத்தின் நாவுல, அம்பன்கங்க கோரளை மற்றும் ரத்தோட்டை, மொனராகலை மாவட்டத்தின் படல்கும்புர மற்றும் வெல்லவாய, இரத்தினபுரி மாவட்டத்தின் கொடகவெல ஆகிய பகுதிகளுக்கு மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

குறித்த பிரதேச செயலக பிரிவுகளுக்கு உட்பட்ட பகுதிகளில் வசிக்கும் மக்கள் அவதானமாக இருக்குமாறு கேட்டுக் கொள்ளப் பட்டுள்ளனர். (எ)

# கொழும்பின் பல பகுதிகளில் நீர்விநியோகம் முற்றாக தடை

கொழும்பு, மே 12

கொழும்பின் பல பகுதிகளில் நீர்விநியோகத்தடை அமுலாகியுள்ளது என்று தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை அறிவித்துள்ளது.

அம்பத்தலையிலிருந்து கடுவலை பகுதிக்கு நீரை வழங்கும் பிரதான விநியோகக் குழாயில் திடீர் வெடிப்பு ஏற்பட்டது.

இதன் காரணமாக கடுவலை உட்பட பல பகுதிகளில் நீர் விநியோகம் தற்காலிகமாக இடைநிறுத்தப்படவுள்ளது என்று தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை தெரிவித்துள்ளது.

இதன்படி கடுவலை, கொத்தலாவல, வெலிவிட்ட, ஹேவாகம, கொரதொட்ட, பொமீரிய, நவகமுவ, ரணால, கஹந்தோட்ட ஆகிய பகுதிகளில் நீர்விநியோகத் தடை அமுலாகும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தத் திடீர் செயலிழப்பு காரணமாக ஏற்படும் அசௌகரியங்களுக்கு வருந்துவதாக தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை மேலும் குறிப்பிட்டுள்ளது.(எ)

# பல்வேறு இடங்களில் இடம்பெற்ற விபத்துக்களில் மூவர் உயிரிழப்பு

கொழும்பு, மே 12

நாட்டின் பல்வேறு பகுதிகளில் இடம்பெற்ற வீதி விபத்துக்களில் சிக்கி மூவர் உயிரிழந்தனர்.

யட்டியாந்தோட்டை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஹற்றன் - கொழும்பு வீதியின் கபுலுமுல்ல பகுதியில், கரவனெல்ல நோக்கி பயணித்த ஓட்டோ ஒன்று எதிரே வந்த பஸ்ஸூடன் மோதி விபத்துக்குள்ளானது.

நேற்று முன்தினம் காலை இடம்பெற்ற இந்த விபத்தில் ஓட்டோ சாரதியும் பின்னால் அமர்ந்து பயணித்த 14 வயது சிறுவனும் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

அங்கு சிகிச்சை பலனின்றி 59 வயதுடைய ஓட்டோ சாரதி உயிரிழந்தார். இவர் பருஸ்ஸல்ல- யட்டியாந்தோட்டை பகுதியைச் சேர்ந்தவர் ஆவார்.

பஸ் சாரதி கைது செய்யப்பட்டுள்ளார்.

இதேவேளை, நேற்று முன்தினம் கேகாலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கொழும்பு - கண்டி பிரதான வீதியின் பல்லபான பகுதியில், வீதியோரம் நிறுத்தப்பட்டிருந்த லொறி ஒன்றின் பின்னால் ஓட்டோ ஒன்று மோதி விபத்துக்குள்ளானது.

ஓட்டோ சாரதியின் கட்டுப்பாட்டை இழந்தமையே இதற்கு காரணம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதில் படுகாயமடைந்த ஓட்டோ சாரதி மற்றுமொரு நபரும் கேகாலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில், ஓட்டோவில் பயணித்த வேரகொடை பகுதியைச் சேர்ந்த 59 வயதுடைய நபர் உயிரிழந்தார்.

மேலும், பொரள்ளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வார்ட் பிளேஸ் பகுதியில், பொரளை சந்தியை நோக்கி பயணித்த கார் ஒன்று வீதியைக் கடக்க முயன்ற பாதசாரி மீது மோதி விபத்து இடம்பெற்றது.

இதில் படுகாயமடைந்த பாதசாரி கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்தார்.

உயிரிழந்தவர் ஹபரணை, காசியபகம பகுதியைச் சேர்ந்த 52 வயதுடையவர் ஆவார்.(எ)

# ஐஸ் போதைப்பொருளுடன் இளைஞன் ஒருவர் கைது

கொழும்பு, மே 12

கல்கிஸை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட அத்திடிய - கஹவிட்ட பகுதியில் பொலிஸ் விசேட அதிரடிப்படையின் ஜயவர்த்தனபுர முகாம் அதிகாரிகளால் முன்னெடுக்கப்பட்ட விசேட சோதனையின்போது பொருளுடன்நபரொருவர் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை கைது செய்யப்பட்டுள்ளார்.

இதன்போது, சந்தேக நபரிடமிருந்து 76 கிராம் 100 மில்லிகிராம் ஐஸ் போதைப் பொருள் கைப்பற்றப்பட்டுள்ளது.கைது செய்யப்பட்டவர்தெஹிவளை பகுதியைச் சேர்ந்த 29 வய துடைய இளைஞன் என அடையாளம் காணப்பட்டுள்ளார். (எ)

# மின் கட்டண அதிகரிப்பு சுமையை மக்கள் சுமக்க வேண்டிய நிலை!

கொழும்பு, மே 12

மின்சாரக் கட்டணத்தை குறைப்பதாகக் கூறி ஆட்சிக்கு வந்த அரசாங்கம், இன்று அதனை அதிகரிக்கும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளதோடு, அதன் பாரிய சுமையை சாதாரண மக்கள் மீதே சுமத்த முற்படுகின்றது என்று ஜனநாயக இடதுசாரி முன்னணியின் தலைவரும் முன்னாள் அமைச்சருமான வாசுதேவ நாணயக்கார விசனம் வெளியிட்டுள்ளார்.

ஜனநாயக இடதுசாரி முன்னணியின் காரியாலயத்தில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து வெளியிடும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், மின்சாரக் கட்டணத்தை எப்படியாவது அதிகரிப்பதே இன்று அதிகாரிகளின் ஒரே நோக்கமாக உள்ளது. பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு மற்றும் மின்சார சபை என்பன ஒன்றிணைந்து இதற்கான ஒரு ஒத்திகையையே தற்போது முன்னெடுத்து வருகின்றன. மின்சார சபையானது பல துணைப் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ள நிலையில், அந்த ஒவ்வொரு பிரிவுகளும் தமது தனிப்பட்ட செலவுகளை ஈடுசெய்ய முற்படும் போது ஒட்டுமொத்த மின்சாரக் கட்டணம் அதிகரிப்பது தவிர்க்க முடியாத ஒன்றாகின்றது.

அரசாங்கமோ அல்லது சம்பந்தப்பட்ட அதிகார சபைகளோ என்ன கூறினாலும்இ இறுதியில் மின்சாரக் கட்டணத்தை உயர்த்துவதுதான் இவர்களின் உண்மையான இலக்காகும். நாட்டின் தற்போதைய சூழலில் மின்சாரக் கட்டணக் குறைப்பு என்பது மக்களுக்கு வெறும் கானல் நீராகவே உள்ளது.

மின்சாரக் கட்டண அதிகரிப்பானது வசதி படைத்த மற்றும் அதிக மின்சாரத்தைப் பயன்படுத்தும் மேல்தட்டு மக்களை மாத்திரமே பாதிக்கும் என்றும்இ ஏழை எளிய மக்களைப் பாதிக்காது என்றும் ஜனாதிபதி ஒரு கருத்தைக் கூறுகின்றார். இது முற்றிலும் யதார்த்தத்துக்கு புறம்பான பேச்சாகும்.

மின்சாரப் பயன்பாட்டில் ஒரு அடிப்படை அறவீடு உள்ளது. அந்த அடிப்படை கட்டணத்தில் இருந்து எவரும் தப்பிவிட முடியாது.

கட்டணங்கள் அதிகரிக்கப்படும் போது அதன் தாக்கம் மறைமுகமாக சகல பொருட்களின் விலை உயர்வுக்கும் வழிவகுக்கும். எனவே, குறிப்பிட்ட ஒரு தரப்பினர் மட்டும் பாதிக்கப்படுவார்கள் என்று கூறுவது மக்களைத் திசைதிருப்பும் செயலாகும்.

மின்சார உற்பத்திக்குத் தேவையான நிலக்கரி தட்டுப்பாடு மற்றும் தரமின்மை காரணமாக, தற்போது அதிக செலவு மிக்க எண்ணெயைப் பயன்படுத்தி மின்சாரத்தை உற்பத்தி செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. இதனால் ஏற்படும் நிதிப் பற்றாக்குறையை ஈடுசெய்யவே கட்டண அதிகரிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

தேர்தல் காலத்தில் மின்சாரக் கட்டணத்தை மூன்று மடங்காகக் குறைப்போம் என்று பாரிய வாக்குறுதிகளை வழங்கி அதிகாரத்துக்க வந்தவர்களுக்கு இன்று ஒரு விசித்திரமான நிலை ஏற்பட்டுள்ளது. இன்று அவர்களுக்கு மின்சாரக் கட்டணத்தை உயர்த்த வேண்டியேற்பட்டுள்ளது. எதிர்வரும் காலங்களில் மக்கள் தமது மின்சாரக் கட்டணப் பட்டியலைப் பார்க்கும் போதுதான் அரசாங்கத்தின் வாக்குறுதிகளின் உண்மைத்தன்மையை உணர்ந்து கொள்வார்கள்- என்றார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## தையிட்டி வீதியை...

விடுவிக்கும் நோக்குடன் கடந்த 28ஆம் திகதி வீதி அளவீடு செய்யப்பட்டது.

இதனை அடுத்து குறித்த வீதியை மறித்து அடைக்கப்பட்டுள்ள வேலியை விகாராதிபதி அகற்றவேண்டும் எனவும், தவறும் பட்சத்தில் பிரதேச சபை வேலியை அகற்றும், வேலியை அகற்றும் செலவீனத்தை விகாராதிபதி பிரதேச சபைக்கு வழங்கவேண்டும் என தவிசாளர் கடிதம் மூலம் விகாராதிபதிக்கு அறிவித்து இருந்தார்.

இதனை அடுத்து பிரதேச சபை விகாரை வேலியை அடாத்தாக அகற்ற முற்படுவதாக பலாலி பொலிஸில் விகாராதிபதி முறைப்பாடு செய்திருந்தார்.

முறைப்பாட்டின் பிரகாரம், தவிசாளரை பலாலி பொலிஸார் அழைத்து, வேலியை அகற்றினால் இனங்களுக்கு இடையில் பிரச்னைகள் ஏற்பட்டு, நல்லிணக்கத்துக்கு பாதிப்பு ஏற்படும். எனவே வேலியை அகற்றும் பணிகளை கைவிடவேண்டும் என அச்சுறுத்தும் தொனியில் கூறியுள்ளனர்.

அதற்கு தவிசாளர் மறுப்பு தெரிவித்து, பிரதேச சபைக்கு சொந்தமான வீதியை விகாராதிபதியே அடாத்தாக கையகப்படுத்தி வைத்திருப்பதாகவும், வீதியை விடுவிக்க நடவடிக்கை எடுப்போம் எனவும் உறுதியாகக் கூறி இருந்தார்.

இந்நிலையில் கடந்த வெள்ளிக்கிழமை வலி.வடக்கு பிரதேச சபை வீதியை மீட்கும் பணியை கைவிடவேண்டும் என்றும் , அதற்கு எதிராக நீதிமன்று தடை உத்தரவு வழங்க வேண்டும் எனவும் பலாலி பொலிஸார் மல்லாகம் நீதிமன்றில் மனு தாக்கல் செய்தனர்.

குறித்த மனு மீதான விசாரணையின்போது, ஒரு தலைப்பட்சமாக விசாரணை செய்ய முடியாது என கூறிய மன்று , வலி.வடக்கு தவிசாளர் மற்றும் பிரதேச சபை செயலாளர் ஆகியோரை நேற்று திங்கட்கிழமை மன்றில் முன்னிலையாகுமாறு அழைப்பு விடுத்திருந்தது.

அதன் பிரகாரம் தவிசாளர் மற்றும் பிரதேச சபை செயலாளர் ஆகியோர் நேற்றைய தினம் மன்றில் முன்னிலையான நிலையில், அவர்கள் சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ. சுமந்திரன் முன்னிலையாகி தமது தரப்பு வாதங்களை முன் வைத்தார்.

அதனை அடுத்து குறித்த வழக்கின் மீதான கட்டளைக்காக எதிர்வரும் 21ஆம் திகதி மன்று திகதியிட்டுள்ளது.

அதேவேளை நேற்று முறைப்பாட்டாளரான விகாராதிபதி மன்றில் முன்னிலையாகி இருக்கவில்லை. அவர் சார்பில் பொலிஸார் மன்றில் வாதங்களை முன் வைத்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (அ)

## விசாரணைகளுக்கு...

பெரமுனவின் கட்சித் தலைமையகத்தில் இடம்பெற்ற நிகழ்வொன்றின் பின்னர், முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இன்று இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவுக்கு சமூகமளிப்பாரா என ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும்போதே அவர் இதனைத் குறிப்பிட்டார்.

எப்போது வரச் சொன்னாலும் தாம் வருவதற்குத் தயாராக இருப்பதாகவும், அரசாங்கம் அச்சுறுத்தல் விடுத்தோ அல்லது அழுத்தங்களைப் பிரயோகித்தோ இந்தப் பயணத்தை முன்னெடுக்க முடியாது என்பதைப் புரிந்து கொள்ளவேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

விசாரணைகள் இடம்பெறுவதை தாம் வரவேற்பதாகத் தெரிவித்த அவர், ஆனால் அந்த விசாரணைகள் அழுத்தங்களுக்கு உட்பட்டதாகவோ அல்லது முன்கூட்டியே திட்டமிடப்பட்ட அரசியல் நிகழ்ச்சி நிரலுக்கு அமைய பலவந்தமாக வாக்குமூலங்களைப் பெற்றுக் கொள்ளும் நோங்கிலோ அமையக் கூடாது என வலியுறுத்தினார்.

அவ்வாறு நீதிக்குப் புறம்பாகச் செயற்படுவதால் இறுதியில் நாட்டு மக்களே நட்டத்தை ஈடுகட்ட வேண்டிய நிலை ஏற்படும் எனவும், மக்களை ஏமாற்றுவதற்காகவே இவ்வாறான நடவடிக்கைகள் எடுக்கப்படுவதாகவும் அவர் குற்றஞ்சாட்டினார்.

தற்போதைய அரசாங்கம் பல முக்கிய விடயங்களை மூடிமறைக்க முயற்சிப்பதாகக் குறிப்பிட்ட நாமல் ராஜபக்ஷ, குறிப்பாக நிதி அமைச்சில் இடம்பெற்ற சம்பவம் மற்றும் 80 கோடி ரூபாய் மோசடி விவகாரத்துடன் தொடர்புடைய மரணத்தை உடனடியாகத் தற்கொலை எனக் கூறி மூடிமறைக்க முயன்றதைச் சுட்டிக்காட்டினார். (அ)

## கண் தானத்தில் சர்வதேச...

வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டுள்ளன.

உள்நாட்டுத் தேவைகளைப் பூர்த்தி செய்தது போக, மேலதிகமாக உள்ள விழிவெண்படலங்கள் சர்வதேச நாடுகளின் கோரிக்கைகளுக்கு இணங்க வழங்கப்பட்டு வருகின்றன.

கடந்த காலங்களில் சர்வதேச வேண்டுகோள்களின் அடிப்படையில் சுமார் 4,000 முதல் 5,000 வரையிலான விழிவெண்படலங்கள் வெளிநாடுகளுக்கு வழங்கப்பட்டுள்ளன.

சிங்கப்பூர் மற்றும் தென்னாபிரிக்கா உள்ளிட்ட பல நாடுகளிலிருந்து இலங்கையின் விழிவெண்படலங்களுக்குத் தொடர்ந்து கேள்வி நிலவி வருவதாகச் சுகாதார அதிகாரிகள் சுட்டிக்காட்டியுள்ளனர். (அ)

## யாழ்.பலநோக்குக்...

ஊழியர்கள் ஒன்றிணைந்து குறித்த போராட்டத்தை முன்னெடுத்தனர்.

நேற்று காலை 8.30 மணியளவில் யாழ்.பண்ணை சந்திப் பகுதியில் இருக்கும் தலைமை அலுவலகம் முன்பாக முன்னெடுக்கப்பட்ட இந்தப் போராட்டம் காரணமாக கூட்டுறவுச் சங்கங்களின் வியாபார நடவடிக்கைகளும் முற்றாகப் பாதிக்கப்பட்டன.

இது குறித்து போராட்டக்காரர்கள் தெரிவிக்கையில் -நாம் பல ஆண்டுகளாக யாழ்.பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் கிளைகளின் ஊழியர்களாகவும் அலுவலக ஊழியர்களாகவும் பணியாற்றி வருகின்றோம்.

இந்நிலையில் இரு மாதங்களுக்கு முன்னர் பணிப்பாளர் சபை மாற்றப்பட்டு புதிய பொது முகாமையாளரும் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

ஆனால் குறித்த பொதுமுகாமையாளர் தன்னிச்சையான செயற்பாடுகளை முன்னெடுத்து இடமாற்றங்களை மேற்கொள்வதால் ஊழியர்களின் மனநிலையுடன் கிளைகளின் வருமானமும் பாதிக்கப்படுகின்றது.

இதைவிட நுகர்வோருக்கு மலிவாக கொடுக்கவேண்டிய பொருள்கள் அனைத்தும் தனியார் கடைகளைவிட கூட்டுறவுச் சங்கக் கிளைகளில் அதிக விலையில் விற்கப்படுகின்றன. இது கொள்வனவில் இருக்கும் சூட்சுமத்தால் தான் ஏற்படுகின்றது.

வெளியில் மலிவாக கிடைக்கும் அனைத்துப் பொருள்களும் சங்கங்களில் அதிக விலைக்கே விற்கப்படுகின்ற நிலையில் எவ்வாறு நுகர்வோர் எம்மை நோக்கி வருவார்கள்? எப்படி நாம் வருமானத்தை காட்ட முடியும்? அல்லது எப்படி வெளிவியாபார நிலையங்களுடன் போட்டி போட்டு எமது சங்கத்தின் நிலையை மேம்படுத்த முடியும்?

இதேவேளை, ஊழியர் சேமலாப நிதியும் எமக்கு முறையாக கட்டப்படுவதில்லை. எமது பிரச்னைகளை பொது முகாமையாளரிடம் கூறினாலும் அது தொடர்பில் அவர் கணக்கில் எடுப்பதோ இல்லை.

இவ்வாறான நிலையில் நாம் நாளாந்தம் பல்வேறு துன்பங்களைச் தீர்வின்றி சந்தித்து வருகின்றோம்.

இதற்கு நீதி கோரியே நாம் இன்று போராட்டம் முன்னெடுக்கின்றோம். அது தொடர்பில் பாதிக்கப்பட்ட நாம் கூட்டுறவு உதவி ஆணையாளருக்கும் கடிதம் கொடுத்துள்ளோம்.

இன்நிலையில் எமக்கு இவ்வாறு ஆழுமையற்ற நிர்வாகம் தேவையில்லை, இந்த பொது முகாமையாளரும் தேவையில்லை. நாம் மன உழைச்சலின்றி தொழில் செய்யும் சுய்ழலை உருவாக்கித்தர வேண்டும்-என்றனர்.

குறித்த இடத்துக்கு வருகை தந்த பாராளுமன்ற உறுப்பினர் இளங்குமரன் நிலைமைகளை ஆராய்ந்ததுடன் இரு தரப்பினருடனும் கலந்துரையாடினார்.

பிரச்னையை தனக்கு எழுத்து மூலம் வழங்குமாறு கூறியிருந்ததுடன், அது தொடர்பில் உரிய தரப்பினருடன் பேசி தீர்வு காண நடவடிக்கை எடுப்பதாகவும் தெரிவித்து போராட்டத்தை முடிவுக்கும் கொண்டு வந்தார்.

## பௌத்த பீடாதிபதிகளுக்கு...

நடவடிக்கையை பிரதேச சபை கைவிடவேண்டும் என பலாலி பொலிஸார் மல்லாகம் நீதவான் நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்திருந்தனர்.

இந்த வழக்கு விசாரணையின்போது வலி.வடக்கு பிரதேச சபை தவிசாளர் மற்றும் செயலாளர் ஆகியோர் சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் முன்னிலையாகி இருந்தார்.

வழக்கு விசாரணையின் பின் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

விகாரை பகுதிக்குள் அமைத்துள்ள பிரதேச சபைக்கு சொந்தமான வீதியை மீட்டால் சமாதான சீர்குலைவு ஏற்படும் என பொலிஸார் மன்றில் தெரிவித்து இருக்கின்றனர்.

பிரதேச சபைக்கு சொந்தமான வீதியை மறித்து வேலி அடைத்து வைத்துள்ள நிலையில் அதனை சட்டத்தின் பிரகாரம் அகற்ற பிரதேச சபை நடவடிக்கை எடுத்துள்ளது.

சட்டத்தினை நடைமுறைப்படுத்துபவர்களை தடுக்க முற்படுபவர்கள், இடையூறு ஏற்படுத்துபவர்களுக்கு எதிராகவே பொலிஸார் நடவடிக்கை எடுக்கவேண்டும்.

இங்கே வீதியை பிடித்து வைத்துள்ள விகாராதிபதி, சட்டத்தை நடைமுறைப்படுத்தினால் சமாதான சீர்குலைவு ஏற்படும் என முறைப்பாடு செய்துள்ளார். இங்கே சமாதான சீர்குலைவு யாரால் ஏற்படும் ? நான் தான் சமாதான சீர்குலைவை ஏற்படுத்துவேன் என்பது போல விகாராதிபதி முறைப்பாடு செய்துள்ளார்.

சட்டத்தை நடைமுறைப்படுத்துவர்களை தடுத்து சட்ட மீறல்களை பொலிஸார் செய்ய முற்படுகின்றனர்.

இது சிங்கள பௌத்த மேலாதிக்க மனநிலை ஆகும். பொலிஸாரும் பௌத்தர்களாக இருப்பதனால் பௌத்த பீடாதிபதிகளுக்கு பயந்து சட்ட மீறல்களை மேற்கொள்ள முயல்கின்றனர்.

சட்டத்தை நடைமுறைப்படுத்துபவர்களை தடுப்பவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்-என்றார். (அ)

## கபில சந்திரசேனவின்...

நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

கபில சந்திரசேனவின் மரணம் தொடர்பாக தற்போது பல்வேறு மர்மமான தகவல்கள் கிடைத்து வருவதாகவும், குறிப்பாக அவருக்குப் பிணை வழங்குதல் மற்றும் அந்தப் பிணையை எதிர்த்தல் ஆகிய விடயங்கள் தொடர்பில் தமது கட்சித் தரப்புத் தகவல்களைத் திரட்டி வருவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

மிக விரைவில் இந்த மரணத்தின் பின்னணியில் உள்ள உண்மைகளைத் தாம் நாட்டு மக்களுக்கு அம்பலப்படுத்தப் போவதாகக் கூறிய அவர், இது திட்டமிட்ட முறையில் தற்கொலைக்குத் தூண்டப்பட்ட ஒரு சம்பவம் என்பதை வலியுறுத்தினார்.

மறைந்த கபில சந்திரசேனவை மரண அச்சுறுத்தல் விடுத்து, அவரிடமிருந்து பலாத்காரமான முறையில் வாக்குமூலம் ஒன்று பெறப்பட்டுள்ளதாகக் குறிப்பிட்ட சாகர காரியவசம், அந்த வாக்குமூலத்தில் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மற்றும் நாமல் ராஜபக்ஷ ஆகியோரின் பெயர்களை வலுக்கட்டாயமாகச் சேர்க்குமாறு அவர் வற்புறுத்தப்பட்டதாகத் தெரிவித்தார்.

இவ்வாறான பலாத்கார அச்சுறுத்தல்கள் குறித்து கபில சந்திரசேன உயிருடன் இருந்தபோதே நீதிமன்றத்தின் கவனத்திற்குக் கொண்டு சென்றிருந்ததாகவும் அவர் சுட்டிக்காட்டினார். இவ்வாறு பலாத்காரமான முறையில் பெறப்பட்ட வாக்குமூலங்களை அடிப்படையாகக் கொண்டு, நாட்டுக்காக உழைத்த தலைவர்களைச் சட்ட விரோதமாகச் சிக்க வைக்க அரசாங்கம் முயலுமானால், அதற்கு எதிராக நாட்டு மக்கள் வீதியில் இறங்கிப் போராடுவார்கள் என அவர் எச்சரித்தார். (அ)

## இன விடுதலைப் போராட்...

முதலமைச்சராகப் பொறுப்பேற்ற தங்களை வாழ்த்துவதில் பெருமை கொள்கின்றோம்.

தமிழ் நாட்டை நீண்ட காலமாக ஆட்சி செய்த அரசியல் கட்சிகளுக்கு மாற்றாக தமிழக வெற்றிக்கழகத்தை ஆரம்பித்து மூன்று வருடகாலத்தில் அரசியல் அரங்கில் உள்ள எதிர்ப்புக்கள் அனைத்தையும் முறியடித்து கடந்த ஏப்ரல் 23 ஆம் திகதி நடைபெற்ற சட்டமன்ற தேர்தலில் கூடுதலான ஆசனங்களை பெற்ற தனிக்கட்சியாக தங்கள் கட்சியை மிளிர வைத்து இன்று தமிழ்நாட்டின் முதலமைச்சராக பதவியேற்றுக் கொண்ட தங்களுக்கு இலங்கை தமிழரசு கட்சி சார்பில் எமது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இந்த மாற்றத்திற்கான பயணத்தில் தாங்கள் காட்டிய கொள்கை உறுதிப்பாடு மற்றும், பொறுமை வியக்கத்தக்கது அதன் மூலம் மத சார்பற்ற கட்சிகளின் ஆதரவைப் பெற்று ஆசனப் பெரும்பான்மையை நிரூபித்து தமிழ் நாட்டு அரசின் முதல்வராகி அரை நூற்றாண்டு வரலாற்றை மாற்றியமைத்து ஒரு அரசியல் மாற்றத்திற்கான ஆரம்பத்தை பதவி ஏற்ற அதே மேடையிலேயே ஆரம்பித்ததும் ஒரு மாற்றமே.

இலங்கைத்தமிழர்கள் ஆகிய நாம் அரசியல் உரிமைகள் மறுக்கப்பட்ட, ஒடுக்கப்பட்ட ஒரு இனமாக இந்த நாட்டில் வாழ்ந்து வருகின்றோம் என்பதை நீங்கள் புரிந்து கொண்டவர் என்பதையும் நாம் அனைவரும் நன்கு அறிவோம். 1987 ஆம் ஆண்டின் இந்திய இலங்கை ஒப்பந்தத்தில் அங்கீகரிக்கப்பட்ட வட- கிழக்கு மாகாணங்கள் இணைந்த எமது தாயகத்தில் எங்களது மொழி, கலை, கலாசாரம், பண்பாடு மற்றும் நிலவுரிமை ஆகியவற்றை பேணிப் பாதுகாக்கும் வகையிலான ஒரு சமஷ்டி முறையிலான அரசியல் தீர்வை இலக்காகக் கொண்டு போராடிவருகின்றோம் என்பதையும் தாங்கள் அறிவீர்கள்.

எனவே, எங்களது இன விடுதலைக்கான போராட்டத்திற்கு ஆதரவு அளித்து எமது இனம் தங்கள் காலத்தில் விடுதலை பெற்றிட சகல ஆதரவையும், ஒத்துழைப்பையும் வேண்டி நிற்கின்றோம் மீண்டும் தாங்களும் தமிழக வெற்றிக்கழகமும் தமிழ் நாட்டின் மிகச்சிறந்த அரசாக செயற்பட பிரார்த்தித்து வாழ்த்துகின்றோம்-எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

## ஸ்டாலினை சந்தித்தார்...

பதவியேற்றுக்கொண்ட நிலையில், நேற்று சட்டப்பேரவையில் புதிய சட்டமன்ற உறுப்பினர்கள் பதவியேற்றுக் கொண்டனர்.

தொடர்ந்து, தமிழக சட்டப்பேரவைத் தலைவர் பதவிக்கு போட்டியிடும் த.வெ.கவின் ஜே.சி.டி. பிரபாகர் மற்றும் துணைத் தலைவர் பதவிக்கு போட்டியிடும் ரவிசங்கர் ஆகியோரின் வேட்புமனு தாக்கல் நிகழ்வில் விஜய் கலந்துகொண்டார்.

இதனைத் தொடர்ந்து, ஸ்டாலினை சந்திக்க அவரது இல்லத்துக்கு விஜய் சென்றார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஈழநாடு
Eelanadu

# மாகாண சபைத் தேர்தல்களை உடனடியாக நடத்தவேண்டும்!

## எதிர்க்கட்சி பிரதிநிதிகள் அரசிடம் வலியுறுத்தல்

கொழும்பு, மே. 12

மாகாண சபைத் தேர்தல்களை உடனடியாக நடத்துமாறு எதிர்க்கட்சிகளின் பிரதிநிதிகள் அரசாங்கத்திடம் வலியுறுத்தியுள்ளனர்.

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நடைபெற்ற ஊடக சந்திப்பில் கருத்து தெரிவித்த ஐக்கிய மக்கள் சக்தி பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார, நீண்ட கால போராட்டங்களின் பின்னர் உருவான மாகாண சபை முறையை செயற்படுத்தி மீண்டும் தேர்தலை நடத்த வேண்டும் எனக் கோரிக்கை விடுத்துள்ளார்.

2017ஆம் ஆண்டு முதல் மாகாண சபைத் தேர்தல்கள் நடத்தப்படவில்லை. முந்தைய அரசுகளும் இதற்கு பொறுப்பேற்க வேண்டும். தற்போதைய தேர்தல் முறையை எளிமைப்படுத்தி, 2025ஆம் ஆண்டில் மாகாண சபைத் தேர்தலை நடத்து வதற்கான தனிநபர் பிரேரணையை முன்வைத்துள்ள தாக இலங்கைத் தமிழ் அரசுக்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் இராசமாணிக்கம் தெரிவித்துள்ளார்.



தற்போதைய மாகாண சபைச் சட்டத்தை இடைக்காலமாக தொடர்ந்தும் அமுலில் வைத்தே தேர்தலை நடத்த முடியும் என இலங்கை முஸ்லிம் காங்கிரஸின் செயலாளர் நிஸாம் காரியப்பர் குறிப்பிட்டார். (அ)

# யூரியா உர விநியோகத்தில் தனியார்துறைக்கும் அனுமதி!

கொழும்பு, மே. 12

யூரியா உர விநியோக நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கு தனியார் நிறுவனங்களுக்கு அனுமதி வழங்க அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக விவசாய பணிப்பாளர் நாயகம் துஷார விக்ரமாராச்சி தெரிவித்துள்ளார்.

இந்தத் தீர்மானத்தின் மூலம் எதிர்வரும் வாரத்துக்குள் உரப் பிரச்னைக்கு முழுமையான தீர்வு கிடைக்கும் என அவர் குறிப்பிட்டார்.

நாட்டில் உரத் தட்டுப்பாடு நிலவுவதாகக் கூறி போலியான அச்சத்தை ஏற்படுத்த வேண்டாம் என அவர் ஏனைய தரப்பினரிடம் கேட்டுக்கொண்டார்.

தற்போது நாட்டுக்குத் தேவையான உரங்கள் போதுமான அளவில் கையிருப்பில் உள்ளதாகவும், பெரும்போகத்திற்குத் தேவையான உரங்களை இறக்குமதி செய்வதற்கான திட்டங்களை அரசாங்கம் ஏற்கனவே தயாரித்துள்ளதாகவும் துஷார விக்ரமாராச்சி மேலும் கூறினார்.

# யாழ்.போதனா வைத்தியசாலைக்கு 3 பார ஊர்திகளில் மருந்து வகைகள்!

## கொழும்பிலிருந்து உடன் கொண்டுவரப்பட்டன

யாழ்ப்பாணம், மே. 12

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் மருந்துக் களஞ்சியத்தில் கடந்த 09ஆம் திகதி அதிகாலை ஏற்பட்ட தீவிபத்தைத் தொடர்ந்து, சுகாதார அமைச்சின் துரித நடவடிக்கையின் கீழ் கொழும்பு மத்திய மருந்து களஞ்சியத்திலிருந்து 3 பார ஊர்திகள் மூலம் மருந்துகள் கொண்டு வரப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் பணிப்பாளர் ரி.சத்தியமூர்த்தி இதனைத் தெரிவித்துள்ளார்.

அத்துடன் கொண்டு வரப்பட்ட அனைத்து மருந்துகளும் புதிதாக தற்காலிகமாக அமைக்கப்பட்ட மருந்துக் களஞ்சியத்தில் பாதுகாப்பாக இறக்கி வைக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

நேற்று முதல் சகல சேவைகளும் வழமைபோன்று நடைபெறுகின்றன எனவும் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் மருத்துவர் ரி.சத்தியமூர்த்தி கூறியுள்ளார்.

மேலும் ஒரு தொகுதி மருந்துகளும் எதிர்வரும் நாள்களில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு கொண்டு வரப்படவுள்ளதாகவும், நோயாளிகளுக்குத் தேவையான அனைத்து மருந்துகளையும் வழங்குவதற்கான முழுமையான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார். (அ)

# வேலணையில் ஐஸ் தொழிற்சாலை பணியை நேரில் ஆராய்ந்தார் கடற்றொழில் அமைச்சர்



யாழ்ப்பாணம், மே. 12

யாழ்ப்பாணம் வேலணை பகுதியில் ஜப்பான் நாட்டு உதவியுடன் நிர்மாணிக்கப் பட்டு வரும் நவீன ஐஸ் தொழிற்சாலையின் கட்டுமானப் பணிகள், தொழில்நுட்ப ஏற்பாடுகள் மற்றும் முன்னேற்ற நிலைமைகள் தொடர்பில் கடற்றொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் நேரில் சென்று பார்வையிட்டார்.


இது தொடர்பில் அவர் ஊடகங்களுக்கு தெரிவிக்கையில்-

தீவகக் கடற்றொழிலாளர்களின் நீண்ட கால தேவையாக இருந்த ஐஸ் வசதியை உறுதிப்படுத்தும் முக்கிய முயற்சியாக, எமது வேண்டுகோளுக்கிணங்க ஜப்பான் அரசாங்கத்தின் ஒத்துழைப்புடன் வேலணைப் பகுதியில் நவீன ஐஸ் தொழிற்சாலை அமைக்கும் பணிகள் தற்போது துரிதமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இந்தத் திட்டம் நிறைவேறுவதன் மூலம் தீவகப் பகுதிகளுக்குத் தேவையான ஐஸ் உள்ளூரிலேயே பெற்றுக் கொள்ளும் வசதி உருவாகும். இதனால் மீன்களின் தரமான சேமிப்பு, பாதுகாப்பான போக்குவரத்து மற்றும் சிறந்த சந்தைப்படுத்தல் நடவடிக்கைகள் மேலும் வலுப்பெறும்.

அதேவேளை கடற்றொழிலாளர்களின் உற்பத்தித்திறன், வருமானம் மற்றும் தொழில்சார் நிலைத்தன்மையும் கணிசமாக உயர்வடையும் என எதிர்பார்க்கப்படுகிறது- என்றார். (அ)

# வடக்கின் மிக உயரமான புத்தர் சிலை நயினாதீவில்!



யாழ்ப்பாணம், மே. 12

நயினாதீவு ரஜமஹா விகாரையில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட 88 அடி உயரமுடைய புத்த சிலை திறந்து வைக்கப்பட்டுள்ளது.

தென்னிலங்கையில் இருந்து பெருமளவான பௌத்தர்கள் அவர்களின் சமய சம்பிரதாயங்களுடன் நயினாதீவுக்கு சென்று, அங்கு முதலில் நயினாதீவு நாகபூசணி அம்மனை வழிபட்டு அங்கிருந்து ஊர்வலமாக விகாரைக்கு சென்று வழிபாடுகளில் ஈடுபட்டதுடன் புத்த சிலை திறப்பு நிகழ்விலும் கலந்து கொண்டனர். (அ)

# "பத்திரிகைத்துறையில் என் கதை" நூல் வெளியீடு




யாழ்ப்பாணம், மே. 12

வீரகத்தி தனபாலசிங்கம் எழுதிய "பத்திரிகைத் துறையில் என் கதை" நூல் வெளியீட்டு நிகழ்வு எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை மாலை 5 மணிக்கு கொழும்பு தமிழ்ச் சங்கத்தின் சங்கரப்பிள்ளை மண்டபத்தில் நடைபெறவிருக்கிறது.

கொழும்பு பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரி ஓய்வுபெற்ற பிரதி அதிபர் தம்பையா இராஜரத்தினம் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் சட்ட நிபுணர் கனக ஈஸ்வரன் பிரதம அதிதியாகவும் எக்ஸ்பிரஸ் நியூஸ்பேப்பேர்ஸ் சிலோன் லிமிட்டெட் நிர்வாகப் பணிப்பாளர் குமார் நடேசன் கௌரவ அதிதியாகவும் கலந்துகொள்கிறார்கள்.

வாழ்த்துரையை பேராசிரியர் சின்னையா மௌனகுருவும் நூல் வெளியீட்டுரையை பேராசிரியர் தேவராசா முகுந்தனும் (இலங்கை திறந்த பல்கலைக்கழகம்) கருத்துரைகளை பேராசிரியர் அருளானந்தம் சர்வேஸ்வரன் (கொழும்பு பல்கலைக்கழக சட்டபீடம்), சமூக, அரசியல் செயற்பாட்டாளர் ஏ.யதீந்திரா ஆகியோரும் நிகழ்த்துவர்.

மூத்த பத்திரிகையாளரும் கலை இலக்கிய ஆளுமையுமான அன்னலக்சுமி இராஜதுரையை நூலாசிரியர் கௌரவிக்கும் நிகழ்வும் இடம்பெறும். தயாபரன் ரெஷாங்கன் நிகழ்ச்சியைத் தொகுத்து வழங்குவார். (அ)

# அரசமைப்பு ஜனநாயகத்தை பாதுகாப்பதில் சட்டத்தரணிகள் சங்கத்தின் பணி முக்கியம்!

## இந்திய உச்ச நீதிமன்ற முன்னாள் நீதியரசர் பி.ஆர். கவாய்

கொழும்பு, மே. 12

அரசியலமைப்பு ஜனநாயகத்தையும் பிரஜைகளின் உரிமைகளையும் பாதுகாப்பதில் ஒரு சுதந்திரமான சட்டத்தரணிகள் சங்கம் மிக முக்கிய பங்காற்றுகிறது என்று இந்திய உச்ச நீதிமன்றத்தின் முன்னாள் நீதியரசர் பி.ஆர். கவாய் தெரிவித்துள்ளார்.

இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தில் "அரசியலமைப்பையும் பிரஜைகளையும் பாதுகாப்பதில் சுதந்திரமான சட்டத்தரணிகள் சங்கத்தின் பங்கு" எனும் தலைப்பில் உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் உரையாற்றுகையில்-

நிறுவன ரீதியான ஒருமைப்பாட்டைப் பாதுகாக்க சட்டத்தரணிகள் துணிச்சலுடன் செயற்படவேண்டும். சட்டத்தரணிகள் சங்கமும் நீதித்துறையும் ஒன்றுடன் ஒன்று இணைந்து செயற்படும் நிறுவனங்களாகும். இவை இரண்டும் இணைந்தே ஒரு ஜனநாயக நாட்டின் பொறுப்புக்கூறலை உறுதிப்படுத்துகிறது.

சட்டத்தரணிகள் சங்கத்தின் சுதந்திரம் என்பது வெறும் தொழில் முறைச் சலுகை அல்ல, அதுவொரு அரசியலமைப்பு ரீதியான அவசியமான விடயமாகும். இதன் மூலமே பிரஜைகளுக்கு அச்சமற்ற சட்டப் பிரதிநிதித்துவம் கிடைப்பதோடு, அரசியலமைப்பு ரீதியான சவால்கள் மூலம் அரசைப் பொறுப்புக்கூறச் செய்ய முடியும்.

இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் வரலாறு மிக முக்கியமானது. நீதி, அரசியலமைப்பு மற்றும் பிரஜைகளின் உரிமைகளுக்காகத் தொடர்ச்சியாகக் குரல் கொடுத்து வருவதன் மூலம் இந்த அமைப்பு பொதுமக்களின் நம்பிக்கையைச் சம்பாதித்துள்ளது. இலங்கையின் இக்கட்டான அரசியலமைப்புத் தருணங்களில் கொள்கை ரீதியான நிலைப்பாடுகளை எடுப்பதற்காக சட்டத்தரணிகள் காண்பித்த துணிச்சலான செயற்பாடுகள் மிக முக்கியமானது.

டிஜிற்றல் ஆளுமை, இடம்பெயர்வு, சுற்றுச்சூழல் சீரழிவு மற்றும் எல்லை தாண்டிய குற்றங்கள் போன்ற சவால்களை சட்ட அமைப்புக்கள் எதிர்கொள்ளும் தற்போதைய காலகட்டத்தில், உலகெங்கிலும் உள்ள அரசியலமைப்பு ஜனநாயகங்களுக்கு ஒரு சுதந்திரமான, விழிப்புணர்வுடன் கூடிய மற்றும் ஈடுபாடுள்ள சட்டத்தரணிகள் சங்கம் அவசியமானது-என்றார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 11.05.2026 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.